# தினபூமி

thinaboomi.com


பூமி: 26 சுற்று: 203 மார்கழி 18

Regd. No.TN/WR/SLM(E)/14/2017-2019 RNI Regn. No. TNTAM/2001/4003

சேலம், வெள்ளி, ஜனவரி 02, 2026

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00

**சுவிட்சர்லாந்து நாட்டில் பயங்கரம்: புத்தாண்டு கொண்டாட்டத்தில் திடீர் வெடிவிபத்து; பலர் பலி..!**

....2-ம் பக்கம்

**ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி திரௌபதி முர்முவுடன் துணை ஜனாதிபதி நேரில் சந்திப்பு**

...3-ம் பக்கம்

**கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்து: 2026-ல் மட்டும் நடைபெறும் 3 உலகக்கோப்பை போட்டிகள்**

....6-ம் பக்கம்







● ஆங்கில புத்தாண்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், பெரியகருப்பன், தா.மோ.அன்பரசன், மு.பெ.சாமிநாதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துப்பெற்றனர். மேலும் தங்களது வாழ்த்துகளையும் முதல்வருக்கு தெரிவித்தனர்.

### ஆங்கில புத்தாண்டையொட்டி

# முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து அமைச்சர்கள் வாழ்த்து

## எம்.பி. - எம்.எல்.ஏ.க்களும் வாழ்த்து தெரிவித்தனர்

சென்னை, ஜன. 02-

**ஆங்கில புத்தாண்டையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். மேலும் தி.மு.க.வினர், பொதுமக்களும் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.**

ஆங்கில புத்தாண்டையொட்டி தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று காலை சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் தி.மு.க. பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

இதே போல பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணை பொதுச்செயலாளர்கள் கனிமொழி, ஆ.ராசா, வெள்ளக்கோவில் சாமிநாதன், அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், தங்கம் தென்னரசு, பெரியகருப்பன், தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, எம்.பி.க்கள் எஸ்.ஜெகத்ரட்சகன், கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், வழக்கறிஞர் வில்சன், கிரிராஜன் உள்ளிட்ட எம்.பி.க்கள், தாயகம் கவி, இ.பரந்தாமன், ஆர்.டி.சேகர், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, ஜெ.கருணாநிதி, க.சுந்தர், எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி உள்ளிட்ட எம்.எல்.ஏ.க்கள், முன்னாள் எம்.பி. ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.ஏ.கே.சித்திக் உள்ளிட்ட ஏராளமானோர் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

அதே போன்று காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார், விசிக எம்.எல்.ஏ. எஸ்.எஸ்.பாலாஜி, மக்கள் விடுதலை கட்சி தலைவர் முருகவேல் ராஜன் உள்ளிட்ட பல்வேறு கட்சி தலைவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

மேலும் தி.மு.க. ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவிக்க கட்சியினர் திரண்டதால் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

இதுபோன்று தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் மற்றும் நிர்வாகிகள் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

இதே போல கட்சியினரும், பொதுமக்களும் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து தெரிவிக்க திரண்டதால் முதல்வர் மு.க.ஸ்டாலின் இல்லம் மக்கள் வெள்ளமாக காட்சியளித்தது.

### குடும்ப ஓய்வூதியதாரர்கள் உள்ளிட்ட

# 'சி', 'டி' பிரிவு அரசு ஊழியர்களுக்கு ரூ. 186 கோடி 'பொங்கல்' போனஸ்

## * தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு
## * சுமார் 9 லட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவர்

சென்னை, ஜன. 02-

**தமிழ்நாடு அரசின் 'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களுக்கு மிகை ஊதியம், 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கிட 183 கோடியே 86 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதன்படி சுமார் 9 லட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**பல்வேறு திட்டங்கள்...**

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டக் கூடிய வகையில், பள்ளிக் கல்வி தொடங்கி உயர்கல்வி வரை, வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார்களுக்கு காலை உணவு தொடங்கி, அவர்தம் ஆற்றலையும் அறிவினையும் பெருக்கிட நான் முதல்வன் வரை, மகளிருக்கு உரிமைத் தொகை தொடங்கி, மாணவக் கண்மணிகளுக்குத் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் வரை துறைதோறும் பல முன்னோடி திட்டங்களை, எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்.

**எழுச்சியோடு கொண்டாட...**

நாடு போற்றும் இத்திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திட அயராது பணியாற்றிவரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவினை எழுச்சியோடு கொண்டாடி மகிழ 2024-2025-ம் ஆண்டிற்கான மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட 183 கோடியே 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார். இதன்படி சுமார் 9 லட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவார்கள்.

**240 நாட்கள் பணிபுரிந்து...**

இந்த உத்தரவின்படி, 'சி' மற்றும் 'டி' பிரிவைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும். தொகுப்பூதியம், சிறப்பு கால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் 2024-2025 ஆம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்.

**ஓய்வூதியதாரர்களுக்கும்**

"சி" மற்றும் "டி" பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 பொங்கல் பரிசாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டசபை தேர்தலில் தி.மு.க.வுக்கு பிரதான எதிர்க்கட்சி அ.தி.மு.க.தான்

## துணை முதல்வர் உதயநிதி கருத்து

சென்னை, ஜன. 02-

**தேர்தலில் தி.மு.க.வுக்கு பிராதன எதிர்க்கட்சி அ.தி.மு.க. தான் என்று தெரிவித்துள்ள துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற தேர்தலில் தி.மு.க.வுக்கு இப்போது வரை வலுவான போட்டியாளர் என யாரும் எனக்கு தெரியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பாக ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:- நாங்கள் பா.ஜ.க.வையும் அதன் அனைத்து பி டீம்களையும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம். தமிழகத்தில் மதசார்பற்ற சக்திகளை பலவீனப்படுத்த பா.ஜ.க. அனைத்து வழிகளையும் பயன்படுத்தும் என்பதை அறிந்தே இருக்கிறோம். தமிழக மக்கள் பா.ஜ.க.வின் சதியை அறிந்து அதை தோற்கடிப்பர்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் முடிவுகள் அனைத்தும் டெல்லியில் எடுக்கப்பட்டு தமிழக கட்சிகளின் மீது திணிக்கப்படுகிறது. நீண்ட காலமாக எங்கள் பிரதான போட்டியாளராக அ.தி.மு.க. இருந்தாலும், இப்போதைய நிலையில் பலம் வாய்ந்த போட்டியாளர் யாரும் இருப்பதாக நான் கருதவில்லை. பலவீனமான நிலையில் அ.தி.மு.க. இருந்தாலும், அதைத்தான் பிரதான எதிர்க்கட்சியாக நாங்கள் பார்க்கிறோம். அவர்கள் தான் எங்களது போட்டியாளர்.

இவ்வாறு அவர் கூறினார்

### பொங்கல் பரிசு தொகுப்புடன்

# தமிழ்நாட்டில் ரொக்கப்பணம் வழங்கப்படுவது எப்பொழுது?

## இன்று அறிவிப்பு வெளியாக வாய்ப்பு

சென்னை, ஜன. 02-

**பொங்கல் பரிசு தொகுப்புடன் வழங்கப்படவுள்ள ரொக்கப்பணம் குறித்த அறிவிப்பு இன்று வெளியாக வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அதை அறிவிக்கவுள்ளார்.**

தமிழகத்தில் கடந்த 2021-ம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி, ரேஷன் கடைகளில் அரிசி அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.2,500 ரொக்கப் பணம் வழங்கப்பட்டது. அதன்பிறகு, சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்த தி.மு.க., 2022, 2023, 2024 ஆகிய ஆண்டுகளில் பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.1,000 ரொக்கப் பணத்தை வழங்கியது. ஆனால், கடந்த ஆண்டு (2025) பொங்கல் பரிசு தொகுப்பு மட்டுமே வழங்கப்பட்டது. ரொக்கப் பணம் எதுவும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், தமிழகத்தில் வரும் ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடக்க இருப்பதால், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரொக்கப் பணமும் வழங்கப்படும் என்று பொதுமக்கள் எதிர்பார்த்தார்கள். இந்த நிலையில், 2026 பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி நிதியை ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது. ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு கொள்முதல் செய்வதற்காக இந்த தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவுத் துறை தகவல் தெரிவித்தது.

இந்த அறிவிப்பை கேட்டு அதிர்ச்சி அடைந்த பொதுமக்கள், இந்த ஆண்டு பொங்கல் பரிசு தொகுப்பு மட்டும்தானா, ரொக்கப் பணம் கிடையாதா என்று கேள்வி எழுப்பி வருகின்றனர். இதுகுறித்து, கூட்டுறவுத் துறை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது கூறியதாவது:- ரூ.248 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது பச்சரிசி, சர்க்கரை, கரும்பு கொள்முதல் செய்வதற்காகத்தான். இதற்கு முன் கூட்டியே பணம் ஒதுக்கி கொடுத்தால்தான் பொருளை பெற முடியும். ஆனால், ரொக்கப் பணம் எவ்வளவு என்பதை நிதித் துறையுடன் முதல்வர் கலந்துபேசி அறிவிப்பு வெளியிட்டால் போதுமானது. பணத்தை உடனடியாக பெற்று ரேஷன் கடைகளுக்கு வழங்க முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

எனவே, பொங்கல் பரிசுடன் ரொக்கப் பணம் வழங்கப்படுவது உறுதியாகியுள்ளது. ரூ.2 ஆயிரம் வழங்கலாமா? அல்லது ரூ.3 ஆயிரம் வழங்கலாமா?, நிதி எவ்வளவு தேவைப்படுகிறது? என்று அரசு கணக்கிட்டு வருகிறது. இன்று ரொக்கப் பணம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட வாய்ப்பு அதிகம் இருப்பதாக அரசு வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

### தமிழகத்தில் வரும் சட்டமன்ற தேர்தலில்

# அ.தி.மு.க. சார்பில் போட்டியிட 10,175 பேர் விருப்ப மனு தாக்கல்

சென்னை, ஜன. 02-

**அ.தி.மு.க. சார்பில் போட்டியிட 10,175 பேர் விருப்ப மனு தாக்கல் செய்துள்ளதாகவும், எடப்பாடி பழனிசாமி தங்களது தொகுதியில் போட்டியிட 2,187 பேர் விருப்ப மனுக்களை தாக்கல் செய்துள்ளதாகவும் அ.தி.மு.க. தலைமை அறிவித்துள்ளது.**

அ.தி.மு.க. சார்பில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விரும்புவர்களிடம் கடந்த 15-ம் தேதி முதல் விருப்ப மனுக்கள் வாங்கும் பணி நடைபெற்றது. 25-ம் தேதி வரை இந்த பணிகள் நடந்து முடிந்த நிலையில், கட்சியினரின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த 28-ம் தேதி முதல் மீண்டும் விருப்ப மனுக்கள் பெறப்பட்டன. கடந்த 4 நாட்களாக அ.தி.மு.க. நிர்வாகிகள் தலைமைக்கழகத்தில் விருப்ப மனுக்களை வாங்கி விண்ணப்பித்து அளித்தனர். நேற்று விருப்ப மனு வாங்குவதற்கு கடைசி நாள் என்பதால் கட்சி அலுவலகத்தில் நிர்வாகிகள் பலரும் திரண்டு விருப்ப மனுக்களை வாங்கி விண்ணப்பித்தனர்.


இந்தநிலையில், அ.தி.மு.க. தலைமை வெளியிட்டுள்ள அறிக்கையில், அ.தி.மு.க. சார்பில் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா சட்டமன்ற தேர்தலில் போட்டியிட 10,175 விருப்ப மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தங்களது தொகுதியில் போட்டியிட வேண்டுமெனெ 2,187 விருப்ப மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| ↓ -32.00 | ↑ 16.95 |
| பாயின்ட் 85,188.60 | பாயின்ட் 26,146.55 |



**தங்கம்**
1 சவரன் ₹ 99,520
1 கிராம் ₹ 12,440



**வெள்ளி**
1 கிலோ ₹ 256,000
1 கிராம் ₹ 256.00

**டாலர்** ₹ 89.99

**பெட்ரோல்** ₹ 100.75
**டீசல்** ₹ 92.34

### சுவிட்சர்லாந்தில் பயங்கரம்:


# புத்தாண்டு கொண்டாட்டத்தில் திடீர் வெடிவிபத்து; பலர் பலி..!

**பெர்ன், ஜன. 02-**

சுவிட்சர்லாந்தில் உள்ள பார் ஒன்றில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் புத்தாண்டு கொண்டாட்டத்தில்

நிகழ்ந்த திடீர் வெடிவிபத்தில் 40-க்கும் மேற்பட்டோர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டின் கிரான்ஸ்-மொந்தனா பகுதியில் உள்ள பார் ஒன்றில் ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக பலர் ஒன்றாக கூடியிருந்தனர். 300 பேர் அமர கூடிய அளவில் கொள்ளளவை கொண்ட அந்த பார் அதிகாலை 2 மணியளவில் பொதுவாக மூடப்படும். இந்நிலையில், நேற்று அதிகாலை 1.30 மணியளவில் பாரில் திடீரென வெடிவிபத்து ஏற்பட்டு உள்ளது. இதில் கரும்புகை பரவி சூழ்ந்து கொண்டது. இதனால், பாரில் கூடியிருந்த பலர் உள்ளே சிக்கி கொண்டனர். அவர்கள் வெளியேற முடியாமல் தவித்தனர்.



இந்நிலையில், தீ விபத்தில் சிக்கி 40-க்கும் மேற்பட்டோர் பலியானதாகவும், பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் பலி எண்ணிக்கு மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. இந்த வெடிவிபத்துக்கான காரணம் என்னவென்று உடனடியாக தெரியவரவில்லை. போலீசார் சம்பவ பகுதிக்கு உடனடியாக சென்று மீட்பு பணியை மேற்கொண்டு வருகின்றனர். ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசரகால சேவையும் முடுக்கி விடப்பட்டு உள்ளது.

### போரை நிறுத்தவே விருப்பம்;

# ரஷ்யாவிடம் ஒருபோதும் சரண் அடைய மாட்டோம்

### உக்ரைன் அதிபர் புத்தாண்டு உரை

**கீவ், ஜன. 02-**

நேட்டோவில் சேரும் உக்ரைனின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ரஷ்யா அந்நாடு மீது 2022-ம் ஆண்டு பிப்ரவரியில் தொடுத்த போரானது 3 ஆண்டுகளை கடந்தும் தொடர்ந்து வருகிறது. போரால் இரு தரப்பிலும் லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். பலர் கொல்லப்பட்டு உள்ளனர்.



போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்த பேச்சுவார்த்தையில் அமெரிக்கா ஈடுபட்டு உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன்படி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை சந்தித்து பேசினார். எனினும், போர்நிறுத்தத்திற்கான உடன்படிக்கை எட்டப்படாத சூழல் உள்ளது. இதனால், போர் நீடித்து வருகிறது.

இந்த சூழலில், ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி 21 நிமிடம் உரையாற்றினார். ஏறக்குறைய 4-ம் ஆண்டை நோக்கி போர் சென்று கொண்டிருக்கும் நிலையில், உக்ரைனியர்களிடையே சோர்வு ஏற்பட்டு உள்ளது என குறிப்பிட்டார். ஆனால், அதனை வீழ்ச்சி என தவறாக கருதி விட கூடாது என்றும் கூறினார்.

இவ்வளவு ஆண்டுகளாக நடந்து வரும் போரை, அவர் 2-ம் உலக போரின்போது, உக்ரைனின் சில பகுதிகளை நாசி படையினர் கைப்பற்றியிருந்த கால கட்டத்துடன் ஒப்பிட்டார். அவர் ஆற்றிய உரையின்போது, உக்ரைனுக்கு அமைதி வேண்டும். போரை முடிவுக்கு கொண்டு வரவே நாங்கள் விரும்புகிறோம். உக்ரைனின் முடிவுக்கு அல்ல.


நாங்கள் களைத்து போய் விட்டோமா? என கேட்டால்.. ஆம். அது உண்மைதான். அதற்காக நாங்கள் சரணடைய தயார் என்பது அதன் பொருளா? அப்படி யாரேனும் நினைக்கிறார்கள் என்றால் அது பெரிய தவறு என கூறினார். போரை நிறுத்தவே விரும்புகிறோம். ஆனால் நாங்கள் சரண் அடைய மாட்டோம். வலுவான ஒப்பந்தத்திலேயே நான் கையெழுத்திடுவேன். வலுவிழந்த ஒப்பந்தம் போர்கள் நீளவே வழி செய்யும் என்றும் அவர் கூறினார். அதனாலேயே ஒவ்வொரு கூட்டத்திலும், ஒவ்வொரு தொலைபேசி அழைப்பிலும், ஒவ்வொரு முடிவும் அதற்கேற்ப எடுக்கப்படுகிறது.

அனைவருக்கும் ஆற்றல் வாய்ந்ததோர் அமைதியை கிடைக்க செய்ய, அது ஒரு நாளுக்கோ, ஒரு வாரத்திற்கோ அல்லது 2 மாதங்களுக்கோ என்றில்லாமல், பல ஆண்டுகளுக்கான அமைதியை ஏற்படுத்தும் வகையில் இருக்க வேண்டும் என்றார்.

# உலகம் அழியும் என கூறிய கானாவை சேரந்தவர் கைது

**கானா, ஜன. 02-**

மேற்கு ஆப்பிரிக்காவில், கினியா வளைகுடாவின் கரையில் அமைந்துள்ள ஒரு நாடு கானா. அதன் தலைநகரம் அக்ரா ஆகும். இந்த ஊரில் இவான்ஸ் எஷுன் என்ற நபர், தன்னை 'எபோ நோவா' என்று அழைத்துக் கொண்டு, 2025 டிசம்பர் 25 அன்று உலகம் அழியும் என்று கூறி பீதி கிளப்பியதால் கைது செய்யப்பட்டுள்ளார்.



கானா போலீசின் சைபர் கிரைம் பிரிவு டிசம்பர் 31 அன்று அவரை கைது செய்தது. இவர் தன்னை தீர்க்கதரிசி என்று கூறிக்கொண்டு, மக்களிடையே பயத்தை ஏற்படுத்தியதே கைதுக்கு காரணம் என்று தெரிகிறது.எபோ நோவா கடந்த ஆகஸ்ட் மாதம் பெரிய மரப் பேழையை (ஆர்க்) கட்டும் வீடியோக்கள் வைரலாகி உலக அளவில் பிரபலமானார்.

நோவாவின் பேழை போல மூன்று ஆண்டுகள் வெள்ளப்பெருக்கு வரும் என்று கூறி, மக்களை மனந்திரும்புமாறு அழைப்பு விடுத்தார். இதனால் அவரது ஊரில் பேழை கட்டும் இடம் சுற்றுலாத் தலமாக மாறியது. பலர் அங்கு சென்று பார்வையிட்டனர்.கடந்த வாரம் எபோ நோவா தனது தீர்க்கதரிசனத்தை மாற்றினார்.

இந்தநிலையில் கிறிஸ்துமஸ் அன்று என்னுடைய வேண்டுதலை கடவுள் ஏற்றுக்கொண்டு விட்டார். அதனால் உலகை அழிக்கும் முடிவை கடவுள் ஒத்திவைத்திருக்கிறார் அதனால் தொடர்ந்து இன்னும் பல பேழைகளை கட்டப் போகிறேன். அதற்கு எனக்கு கடவுள் போதிய நேரம் கொடுத்திருக்கிறார் என்று கூறிய அவர் நோவாவை தேடி வந்த மக்களிடம் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் மகிழ்ச்சியாய் இருங்கள் என கூறினார். இதனால் மக்கள் கோபடைந்தனர். அவரை கைது செய்ய வலியுறுத்தி கோரி க்கை வைத்தனர்.இந்தநிலையில் அவர் அதிரடியாக கைது செய்யப்பட்டார். எபோ நோவா மழுப்பலாக வீடியோ வெளியிட்ட நிலையில், அவரை பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிப்பதாகக்கூறி காவல்துறை கைது செய்தது.

# நெதர்லாந்து தேவாலயத்தில் தீ விபத்து

**ஆம்ஸ்டர்டாம், ஜன. 02-**

புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு இடையே நெதர்லாந்தில் உள்ள ஒரு தேவாலயத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதால் அங்கு பரபரப்பு நிலவியது.

நெதர்லாந்தின் தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க வொண்டெல்கெர்க் என்ற தேவாலயத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.45 மணிக்கு (ஜன. 1) பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

தேவாலயத்தின் கோபுரத்தில் வேகமாக தீ பரவியது. அதன் சில பகுதிகள் இடிந்து விழுந்ததாக அங்கிருந்தவர்கள் கூறினர். தகவலறிந்து தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து தீயைக் கட்டுப்படுத்தினர்.

எனினும் பல மணி நேரமாக அப்பகுதி முழுவதும் புகைமூட்டமாக காட்சியளித்தது. அருகில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி காவல்துறையினர் அறிவுறுத்தியனர்.

பாதிப்புகள் குறித்த முழு விவரங்கள் இன்னும் தெரியவில்லை. இந்த தேவாலயம் 154 ஆண்டுகள் பழமையானது என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் போரில் ரஷ்யா உறுதியாக வெற்றி பெறும்

### அதிபர் புதின் சூளுரை

**மாஸ்கோ, ஜன. 02-**

புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு ரஷ்ய மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் அந்நாட்டு அதிபர் விளாதிமீர் புதின் புதன்கிழமை இரவு உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: "நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வரும் உக்ரைன் போரில், ரஷ்யா தனது இலக்கை எட்டி வெற்றி பெறும். நமது நாயகர்கள் (ராணுவ வீரர்கள்) மீதும், நமது வெற்றியின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளோம். கோடிக்கணக்கான ரஷ்ய மக்கள் புத்தாண்டு தருணத்தில் ரஷ்ய வீரர்களுக்காக பிரார்த்திக்கின்றனர். நாட்டு மக்கள் ராணுவத்தின் பின்னால் ஒற்றுமையாக நிற்கின்றனர்." எனத் தெரிவித்தார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு ரஷ்ய அதிபராக இருந்த போரிஸ் யெல்ட்சின், புத்தாண்டு உரையின்போது தனது பதவியை ராஜிநாமா செய்வதாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து, புதின் அதிபராகப் பதவியேற்றார். அவர் பதவியேற்று 26 ஆண்டுகள் நிறைவடைகிறது.

ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதின் வீட்டின் மீது உக்ரைன் ராணுவம் ட்ரோன் தாக்குதல் நடத்தியதாக அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் திங்கள்கிழமை தெரிவித்தது. ஆனால், ட்ரோன் தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை, ஆதாரங்கள் இருந்தால் வெளியிடுங்கள் என்று உக்ரைன் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு முன்னதாக, ரஷ்ய அதிபர் வீட்டின் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்ட விடியோவை ரஷ்ய வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ளது. ரஷ்யா - உக்ரைன் இடையே அமைதி ஒப்பந்தம் மேற்கொள்ளும் பணியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தீவிரம் காட்டி வரும் சூழலில், ரஷ்ய அதிபர் வீட்டின் மீதான தாக்குதலும், புதினின் சூளுரையும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஆண்டு தொடக்கத்தில் குறைந்த தங்கம் மற்றும் வெள்ளி விலை..!


**சென்னை, ஜன. 02-**

இந்த ஆண்டின் தொடக்க நாளில் சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 320 குறைந்து ரூ. 99,520-க்கும் ஒரு கிராம் ரூ. 40 குறைந்து ரூ. 12,440-க்கும் விற்பனையானது.

தங்கத்தின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து வருகிறது. ஒரு சவரன்(22 காரட்) தங்கம் ஒரு லட்சம் ரூபாயைத் தாண்டி விற்பனையான நிலையில் நேற்று முன்தினம் (டிச. 31) தங்கத்தின் விலை அதிரடியாக ரூ.960 குறைந்தது. நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி ஒரு சவரன் ரூ. 99,840-க்கும் ஒரு கிராம் ரூ. 12,480-க்கும் விற்பனையானது. இதையடுத்து நேற்றும் (ஜன. 1, 2026) புத்தாண்டு நாளில் தங்கத்தின் விலை குறைந்து விற்பனையானது.

தங்கம் விலை சவரனுக்கு ரூ. 320 குறைந்து ரூ. 99,520-க்கும் ஒரு கிராம் ரூ. 40 குறைந்து ரூ. 12,440-க்கும் விற்பனையானது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 குறைந்து ரூ. 256-க்கும் ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ. 2,56,000-க்கும் விற்பனையாகிறது. தங்கம், வெள்ளி விலை சற்று குறைந்துள்ளது மக்கள் மத்தியில் சற்று ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது.

**02-01-2026**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** கவனமாகப் படித்து கல்வியில் தேர்ச்சி பெறலாம். வாக்குவாதங்களை தவிர்த்தால் இல்லத்தில் அமைதி நிலவும். காரியங்கள் கைகூட கடின உழைப்பு தேவை.

**ரிஷபம்:-** பேச்சாலேயே பிறரை மயக்கி ஆதாயம் அடைவீர்கள். வாய்க்கு ருசியாக வக்கணையாக சாப்பிட ஆர்வம் கொள்வீர்கள். புதிய வேலை வாய்ப்பு, கல்வியில் தேர்ச்சி என அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்:-** நிம்மதி என்றால் என்ன என்று தேடவேண்டிய நிலை ஏற்படும். பெண்களால் பணவிரயம் ஏற்படும். இயலாமையால் அனைவரின் மேலும் ஒரு தேவையற்ற வெறுப்பு ஏற்படும்.

**கடகம்:-** ஆரோக்கியம் மேம்படும் அனுகூலமான நாள். தனவரவு அதிகரிக்கும், பெண்களிடம் எதிர்பார்த்த இலாபங்கள் ஏற்படும். டாக்டர்கள் கைவிட்ட கேஸ் கூட துள்ளி எழுந்து ஓடும்..

**சிம்மம்:-** எல்லா விதத்திலும் ஏற்றம் தரும் நாள். இனிமையான, மற்றும் சாதுர்யமான பேச்சாற்றலால் காரியங்களைச் சாதித்திக் கொள்வீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**கன்னி:-** பக்தி மயமான நாள். தெய்வ பக்தியால் மன நிம்மதி கூடும். புத்திர பாக்கியம் ஏற்படும். திருவருளாலும், குருவருளாலும் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**துலாம்:-** நியாயமாக நடக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், சொந்த பந்தங்களுக்கு இடையே ஒற்றுமை குறையும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் பணியிடத்தில் சாதகமான சூழல் உருவாகும்.

**விருச்சிகம்:-** வியாபாரம் மற்றும் தொழில் அபிவிருத்தி ஏற்படும் நாள். சாதுர்யமான பேச்சால் அனைவரையும் கவர்ந்திடுவீர்கள். செல்வ நிலை சீராக உயரும். அரசால் ஆதாயங்கள் ஏற்படும்.

**தனுசு:-** இனிய சுற்றுலாப் பயணங்களின் இன்பம் பெருகும். பெண்ணின் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியம் கொண்டாட்டங்கள் நிறைவேறும்.

**மகரம்:-** பங்குச்சந்தை விவகாரங்களில் நாட்டம் ஏற்படும். எவ்வளவு நன்றாக உழைத்தாலும் நல்ல பெயர் எடுக்க முடியாது. தங்கள் உடமைகளை பாதுகாப்புடன் வைத்துக் கொள்வது நல்லது.

**கும்பம்:-** அன்னையின் சொல் கேட்டு நடந்தால் ஆனந்தம் பெருகும். வாழ்வில் உழைத்து முன்னேற முயலுங்கள். வெற்றி உங்கள் பக்கம். வயிறு சம்பந்தமான உபாதைகள் எழலாம்.

**மீனம்:-** எல்லா முயற்சிகளிலும் எளிதில் வெற்றி கிட்டும். மனதில் மகிழ்ச்சியும் தெம்பும் அதிகரிக்கும். குழந்தைகள் பால் அன்பைப் பொழிவார்கள். புதிய நண்பர்கள் தொடர்பும் உதவியும் கிடைக்கும்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், கவிஞர் மனுஷ்ய புத்திரன் ஆங்கில புத்தாண்டையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### எடப்பாடி பழனிசாமி மீண்டும் தமிழக முதல்வராக வரவேண்டி

# முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம.எல்.ஏ. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம்

**மதுரை, ஜன. 02-**

எடப்பாடி பழனிசாமி மீண்டும் தமிழக முதல்வராக வரவேண்டி முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம.எல்.ஏ. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.



ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்தார். இதில் ஜெயந்தி ராஜூ, சௌமியா விஜயகுமார், கணேஷ்பிரபு, ரம்யா கணேஷ்பிரபு, விஷ்ணுசாகர், விபின் சாகர், வருண்சாகர் மற்றும் பா.குமார், சக்திவிநாயகர்பாண்டியன், எம்.ஜி.ராமச்சந்திரன், எஸ்.டி.ஜெயபாலன், கார்னர் பாஸ்கர், ஏ. பாஸ்கரன், ரேசன் பாலமுருகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

பின்னர் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது- எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக மீண்டும் வரவேண்டும். தமிழ்நாடு அமைதியாக இருக்க வேண்டும் போதை கலாச்சாரம் இருக்கக்கூடாது என்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்துள்ளோம். குழந்தைகள் முதல் பாட்டிகள் வரை பாதுகாப்பு இருக்க வேண்டும். ஊழல் இல்லாத ஆட்சி, சமமான ஆட்சி, உண்மையான ஆட்சி அமைய வேண்டும். உண்மையான விடியலை எடப்பாடி பழனிசாமி கொடுப்பார்..

எந்த முதலமைச்சரும் சாதிக்காத சாதனையை 11 மருத்துவக் கல்லூரியை தொடங்கி சாதனை செய்துள்ளார் எடப்பாடி பழனிசாமி. தமிழக மக்கள் ஜெயலலிதா. எம்.ஜி.ஆர். காலத்தில் எப்படி வாழ்ந்தார்களோ அதே போல வாழ எடப்பாடி பழனிச்சாமி நடவடிக்கை எடுப்பார். விஜய் கட்சிக்கு கூட்டம் கூடுகிறதே என்பது குறித்த கேள்விக்கு? சினிமா கவர்ச்சிக்கு எப்போதுமே . அமிதாப் பச்சன் வந்தால் கூட கூட்டம் வரும் மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்று தெரிவித்தார். மதுரையில் 200 கோடி மாநகராட்சியில் திமுகவினர் கொள்ளையடித்துள்ளனர் இதற்கு தீர்வே இல்லை.

மாநகராட்சி மேயர் இல்லாததால் மாநகராட்சி கவுன்சிலர் கூட்டம் நடைபெறவில்லை இந்த நாள் வரை மக்கள் பிரச்சனை தீராமல் உள்ளது . மதுரையில் தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா செய்ய சொல்லி இருக்கலாம். இந்த ஆட்சி 23 ஆம் புலிகேசி ஆட்சிபொழுதான் இருக்கிறது. கஞ்சா போதை பொருள் விற்பவர்கள் டோர் டெலிவரி செய்கிறார்கள் அமேசான், ஜொமேட்டோ, ஸ்சுகி போல் ஆகிவிட்டது. தமிழ்நாட்டிற்கு வந்த பாவமான வட மாநில இருந்துள்ளார்.. இது போதாதா சட்ட ஒழுங்கு கெட்டுப் போனதற்கு. காங்கிரஸ்காரர்கள் நாட்டுக்காக சுதந்திரம் வாங்கி கொடுத்தார்கள் இவர்கள் தற்போது உள்ளவர்கள் அல்ல. கூட்டணியில் இருந்தாலும் காங்கிரஸ்காரர்களுக்கு ஆதங்கம் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# நியூயார்க் நகர மேயராக பதவியேற்றார் மம்தானி

**நியூயார்க், ஜன. 02-**

34 வயதில் நியூயார்க் நகர மேயராக பொறுப்பேற்றதன் மூலம் முதல் முஸ்லிம் மற்றும் தெற்காசியாவை சேர்ந்தவர் என்ற பெருமையை மம்தானி பெற்றுள்ளார்.



அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயராக ஜொரான் மம்தானி நேற்று காலை முறைப்படி பதவியேற்று கொண்டார். அந்நாட்டின் புகழ் பெற்ற டைம்ஸ் சதுக்கத்தில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் களை கட்டிய சில மணிநேரத்தில் அவருடைய பதவியேற்பு நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சியின்போது மம்தானியின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பத்திரிகை நிருபர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 34 வயதில் நியூயார்க் நகர மேயராக பொறுப்பேற்றதன் மூலம் முதல் முஸ்லிம் மற்றும் தெற்காசியாவை சேர்ந்தவர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

அவருக்கு மாகாண வழக்கறிஞரான அட்டர்னி ஜெனரல் லெட்டீசியா ஜேம்ஸ் பதவி பிரமாணம் செய்து வைத்துள்ளார். மம்தானியின் தாயார் ஆஸ்கர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட இயக்குநர் என்பதுடன், நகரின் சில பகுதிகளில் இலவச பஸ்களை கொண்டு வந்த பெருமைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார். அவரை போன்று, மம்தானியும் இலவச பஸ்களை நகரங்களுக்கு கொண்டு வருவார் மற்றும் அதிகரித்து வரும் விலைவாசியை கட்டுப்படுத்துவார் என மக்கள் நம்பிக்கை தெரிவித்து உள்ளனர்.



ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு அ.தி.மு.க. மாநில மருத்துவர் அணி இணை செயலாளர் டாக்டர் சரவணனுக்கு முத்தானந்தம் மற்றும் அஜித் ஆகியோர் நினைவு பரிசு வழங்கி வாழ்த்து பெற்றனர்.

### புத்தாண்டை முன்னிட்டு

# ஜனாதிபதி திரௌபதி முர்முவுடன் துணை ஜனாதிபதி நேரில் சந்திப்பு

**புதுடெல்லி, ஜன. 02-**

டெல்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி திரௌபதி முர்முவை, துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன் நேற்று நேரில் சந்தித்து பேசினார். அப்போது அவருக்கு புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்து கொண்டார்.



இதுபற்றிய புகைப்படங்களை தன்னுடைய எக்ஸ் வலைதள பதிவில், ஜனாதிபதி அலுவலகம் பகிர்ந்து கொண்டது. இதுதொடர்பாக வெளியிட்ட செய்தியில், நாட்டின் துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன், ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி திரௌபதி முர்முவை, நேற்று நேரில் சந்தித்து பேசினார். அப்போது அவருக்கு புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்து கொண்டார் என தெரிவித்து உள்ளது. புது வருட வாழ்த்துகளை உயர் மட்ட அந்தஸ்தில் உள்ள தலைவர்கள் பகிர்ந்து கொள்வது மரபு ரீதியாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது. ஆங்கில புது வருட பிறப்பையொட்டி, நாடு முழுவதும் உள்ள குடிமக்களுக்கும் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களுக்கும், ஜனாதிபதி திரௌபதி முர்மு தன்னுடைய வாழ்த்துகளை நேற்று தெரிவித்து கொண்டார். அப்போது அவர், புதுபிக்கப்பட்ட சக்தி, நேர்மறையான மாற்றத்திற்கான நேரம் இது என குறிப்பிட்டதுடன், தேச கட்டமைப்பில் கூட்டு பொறுப்புணர்வுக்கான தருணம் இது என்றும் குறிப்பிட்டார்.

# வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில் இயக்கப்படும் வழித்தடம் எது?

### மத்திய அமைச்சர் அஸ்வினி தகவல்

**புதுடெல்லி, ஜன. 02-**

வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில் கொல்கத்தா – கவுகாத்தி இடையே இயக்கப்பட உள்ளது. வரும் 18 அல்லது 19-ம் தேதிகளில் இந்த ரயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளதாகவும், ஓரிரு நாள்களில் இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் முக்கிய வழித்தடங்களில் வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்திலும் வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகின்றன. ஏ.சி. வசதி, பயோ-டாய்லெட், தானியங்கி கதவுகள் உள்ளிட்ட பாதுகாப்பு அம்சங்களுடன், அதிநவீன சொகுசு வசதிகள் கொண்ட இந்த ரயில்களுக்கு பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

தற்போது இந்த ரயில்களில் இருக்கை வசதி மட்டுமே உள்ளது. இதனைத் தொடர்ந்து, படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில்களை இயக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதையடுத்து, வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில்களை தயாரிக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வந்தன. ரயில் தயாரிப்பு பணிகளுடன் சோதனை ஓட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. இதையடுத்து, இந்த ரயில் எந்த வழித்தடத்தில் இயக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு பயணிகள் மத்தியில் எழுந்த நிலையில், இது குறித்த அறிவிப்பை மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் வெளியிட்டுள்ளார்.

வந்தே பாரத் ஸ்லீப்பர் ரயில் கொல்கத்தா – கவுகாத்தி இடையே இயக்கப்பட உள்ளது. வரும் 18 அல்லது 19-ம் தேதிகளில் இந்த ரயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைக்க உள்ளதாகவும், ஓரிரு நாள்களில் இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். கட்டணத்தைப் பொருத்தவரை, மூன்றாம் வகுப்பு ஏசி பெட்டிக்கு ரூ.2,300 ஆகவும், முதல் வகுப்புக்கு ரூ.3,600 ஆகவும் கட்டணம் இருக்கும் என்று ரயில்வே அமைச்சர் கூறினார்.

### பாதுகாப்பு படை தீவிர தேடுதல் வேட்டை:

# மணிப்பூரில் துப்பாக்கி, டிரோன் உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல்

**இம்பால், ஜன. 02-**

மணிப்பூரில் பாதுகாப்பு படையினர் நடத்திய தீவிர தேடுதல் வேட்டையில் 10 கையெறி குண்டுகள், 4 டெட்டனேட்டர்கள், 3 கிலோ எடையுள்ள சக்தி வாய்ந்த வெடிகுண்டு, 6 கண்ணீர் புகை குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

மணிப்பூரில் கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் குகி மற்றும் மெய்தி இன குழுக்களுக்கு இடையே நடந்த மோதலால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பல இடங்களிலும் வன்முறை பரவியதில் 60-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனை தொடர்ந்து, ராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது.

எனினும், தொடர்ந்து அவ்வப்போது வன்முறை ஏற்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் நடவடிக்கையாக அரசு கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்தி உள்ளது. இந்நிலையில், பல்வேறு மாவட்டங்களில் வன்முறையால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் பாதுகாப்பு படையினர் தொடர்ந்து தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக காக்சிங் மாவட்டத்தின் வபாகை நடேகோங் துரென் மெய் பகுதியில் தேடுதல் பணியில் ஈடுபட்டபோது, 6 துப்பாக்கிகள் மற்றும் அதிக அளவிலான வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டன. அப்படி பறிமுதல் செய்யப்பட்ட துப்பாக்கிகளில் எம்-16 ரக துப்பாக்கி, எஸ்எல்ஆர், சிங்கிள் பேரல், போல்ட்-ஆக்சன் துப்பாக்கிகள் மற்றும் 7.65 மி.மீ. கைத்துப்பாக்கிகள் ஆகியவை அடங்கும் என்று போலீசார் தெரிவித்தனர். இவை தவிர, 10 கையெறி குண்டுகள், 4 டெட்டனேட்டர்கள், 3 கிலோ எடையுள்ள சக்தி வாய்ந்த வெடிகுண்டு, 6 கண்ணீர் புகை குண்டுகள் மற்றும் 71 தோட்டாக்கள் உள்ளிட்டவையும் பறிமுதல் செய்யப்பட்டன.

இதேபோன்று, நாற்கரங்களை கொண்ட டிரோன் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைக்கருவிகளும் கைப்பற்றப்பட்டன. இதனால், அந்த பகுதியில் ஏற்படவிருந்த பெரிய அளவிலான வன்முறை தவிர்க்கப்பட்டு உள்ளது. பதற்றம் தணிந்து உள்ளது. தொடர்ந்து பாதுகாப்பு படையினர் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தே.மு.தி.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் வருகிற 5-ம் தேதி நடக்கிறது

**சென்னை, ஜன. 02-**

கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் வருகிற 5-ம் தேதி தே.மு.தி.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறவுள்ளதாக அக்கட்சியின் தலைமை அறிவித்துள்ளது.

தமிழகத்தில் வரும் ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. கடந்த முறை (2021-ம் ஆண்டு) அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றிருந்த தே.மு.தி.க., இந்த முறை இன்னும் கூட்டணியை முடிவு செய்யவில்லை. பொங்கல் பண்டிகைக்கு பிறகு கூட்டணி குறித்த அறிவிப்பை தே.மு.தி.க. தலைமை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், தே.மு.தி.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம் ஜனவரி 5-ந் தேதி (திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு கோயம்பேட்டில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது.

இந்தக் கூட்டத்திற்கு கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தலைமை தாங்குகிறார். கூட்டத்தில், சட்டசபை தேர்தலில் தே.மு.தி.க. யாருடன் கூட்டணி? என்பது இறுதி செய்யப்பட இருப்பதாக கூறப்படுகிறது. மேலும், வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள் எவை? என்பது குறித்தும் மாவட்ட செயலாளர்களிடம் கருத்து கேட்கப்பட உள்ளதாம்.

# கேரளாவில் நிச்சயமாக எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும்

### மத்திய அமைச்சர் சுரேஷ் கோபி உறுதி

**திருவனந்தபுரம், ஜன. 02-**

கேரளாவில் நிச்சயமாக எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும் என்று மத்திய அமைச்சர் சுரேஷ் கோபி உறுதிப்பட தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் குருவாயூரில் இன்று மத்திய அமைச்சர் சுரேஷ் கோபி செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவரிடம் 2026-ம் ஆண்டு செயல்பாட்டுக்கு வரக்கூடிய திட்டங்கள் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்தபோது அவர் கூறியதாவது:-

கேரளாவில் தடயவியல் ஆய்வகம் அமைப்பதற்கான திட்டம் முன்மொழியப்பட்டது. அதற்கான ஆவணங்களும் உள்ளன. ஆனால் அத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது. இருப்பினும் கேரளாவிற்கு விரைவில் மற்றொரு பெரிய திட்டம் வர இருக்கிறது. மத்திய அமைச்சர் அமித்ஷா ஒரு பெரிய திட்டத்தை முன்மொழிந்துள்ளார். அதற்கான நிலம் ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

கேரளாவில் நிச்சயமாக எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படும். அது யாருடைய தனிப்பட்ட திறமையாலும் அல்ல, அதன் இயல்பான வழியில் வரும். 2015 முதல் எய்ம்ஸ் குறித்து நிலையான நிலைப்பாட்டை கடைபிடித்து வருகிறேன். ஆலப்புழாவில் எய்ம்ஸ் நிறுவப்படவில்லை என்றாலும், திருச்சூருக்கு அது மிகவும் தேவையானது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை உயர்வு

**சென்னை, ஜன. 02-**

கடந்த 2 மாதங்களாக வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டரின் விலை குறைந்த நிலையில் இந்த மாதம் உயர்ந்துள்ளது.;

பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத் துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும், சமையல் கேஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கேஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. இதில் சமையல் கேஸ் சிலிண்டர்களின் விலைகளை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகிறது.

அந்த வகையில் நேற்று எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, சென்னையில் வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலை உயர்ந்துள்ளது. கடந்த 2 மாதங்களாக விலை குறைந்த நிலையில் இந்த மாதம் உயர்ந்துள்ளது. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.110 உயர்ந்து, ரூ.1,849.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலை மாற்றமின்றி ரூ.868.50 காசுகள் என்ற நிலையில் நீடிக்கிறது.

# சென்னையில் விபத்தில்லா புத்தாண்டு கொண்டாட்டம்

### மாநகர காவல்துறை அறிவிப்பு

**சென்னை, நவ. 02-**

சென்னையில் நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டங்களின்போது விபத்தால் உயிரிழப்புகள் இல்லை என சென்னை மாநகர காவல்துறை அறிவித்துள்ளது.

வரும் 2026ம் ஆண்டு புத்தாண்டுக் கொண்டாட்டம் எவ்வித அசம்பாவிதமும் நடக்காமல் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு, சென்னை பெருநகர காவல் துறை சார்பில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, காவல்துறை என மொத்தம் 19,000 காவல் துறை அதிகாரிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

மேலும், காவல் துறையினருக்கு உதவியாக, சுமார் 1,500 ஊர்க்காவல் படையினரும் புத்தாண்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ஆங்கிலப் புத்தாண்டை ஒட்டி சென்னையில் 112 இடங்களில் 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. குறிப்பாக, சாலை விபத்துகள் நிகழக்கூடிய பகுதிகள் கண்டறியப்பட்டு அங்கு காவல் துறையினருடன், 108 ஊழியர்களும் மீட்பு மற்றும் மருத்துவ சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அவசர சிகிச்சைப் பிரிவில் படுக்கை வசதியும் ஆயத்த நிலையில் இருந்தன. அதேபோன்று ஆரம்ப சுகாதார நிலையங்களில், முதலுதவி சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மக்கள் அதிகம் கூடும், பொழுதுபோக்கு இடங்கள், தேவாலயங்களில் மருத்துவக் குழுவில் இருந்ததாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### 15 குற்ற வழக்குகளில் தேடப்பட்ட

# நக்சலைட்டு தலைவர் பீகாரில் என்கவுன்ட்டரில் படுகொலை

**பெகுசராய், ஜன. 02-**

பீகார் மாநிலத்தில் 15 குற்ற வழக்குகளில் தேடப்பட்ட நக்சலைட்டு தலைவர் என்கவுன்ட்டரில் படுகொலை செய்யப்பட்டார்.

பீகாரின் பெகுசராய் மாவட்டத்தில் 15-க்கும் மேற்பட்ட குற்ற வழக்குகளில் தொடர்புடைய நக்சலைட்டு தலைவர் தயானந்த் மலாக்கர். கடந்த காலங்களில் வடக்கு பீகாரில் பல்வேறு நக்சலைட்டு தாக்குதல்களில் ஈடுபட்டு வந்தவர். தடை செய்யப்பட்ட சி.பி.ஐ. மாவோயிஸ்டு இயக்கத்தின் வடக்கு பீகார் மத்திய மண்டல குழு செயலாளராக செயல்பட்டு வந்த அவரை பற்றிய தகவல் அளிப்போருக்கு ரூ.50 ஆயிரம் பரிசு தரப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதற்காக அவரை பல இடங்களிலும் பாதுகாப்பு படையினர் தேடி வந்தனர். இந்நிலையில், பெகுசராய் மாவட்டத்தின் தெக்ரா பகுதியில் அவர் கூட்டாளிகளுடன் பதுங்கியிருக்கிறார் என தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து, மாவட்ட போலீசார் மற்றும் சிறப்பு அதிரடி படையினர் இணைந்து கூட்டாக நடத்திய தேடுதல் வேட்டையின்போது, பதுங்கியிருந்த மலாக்கரையும் அவருடைய கூட்டாளிகளையும் கண்டறிந்தனர்.

அவர் வீரர்களை நோக்கி சுட்டு விட்டு தப்ப முயற்சித்தபோது, படையினர் தற்காப்புக்காக பதிலுக்கு அவரை சுட்டனர். இதில், அவர் படுகொலை செய்யப்பட்டார். அவருடைய 2 கூட்டாளிகள் பின்னர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து துப்பாக்கி, கைத்துப்பாக்கி, தோட்டாக்கள் உள்ளிட்ட ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.



தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், மக்கள் விடுதலை கட்சி நிறுவனத்தலைவர் சு.க.முருகவேல்ராஜன் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்ல ஆரோக்கியம், வளம் கிடைக்கட்டும்

### பிரதமர் நரேந்திரமோடி புத்தாண்டு வாழ்த்து

**புதுடெல்லி, ஜன. 02-**

நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்ல ஆரோக்கியமும், வளமும் கிடைக்கட்டும் என்று பிரதமர் மோடி புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2026-ம் ஆண்டு ஆங்கில புது வருட பிறப்பையொட்டி உலகம் முழுவதும் உள்ள தலைவர்கள், தங்களுடைய நாட்டு மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். இதன்படி, பிரதமர் மோடி வெளியிட்டு உள்ள எக்ஸ் வலைதள பதிவில், 2026-ம் ஆண்டு, ஒவ்வொருவருக்கும் ஆச்சரியம் தரும் ஆண்டாக அமையட்டும்.

இந்த ஆண்டு, உங்களுக்கு நல்ல ஆரோக்கியமும், வளமும் கொண்டு வரட்டும். உங்களுடைய முயற்சிகளில் வெற்றி கிட்டட்டும். நீங்கள் ஆற்ற கூடிய அனைத்து பணிகளும் நிறைவேறட்டும். நம்முடைய சமூகத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்பட இறைவனை வேண்டி கொள்கிறேன் என்று தெரிவித்து உள்ளார். நாட்டில் நல்லிணக்கம் ஏற்படவும், அனைவரின் நலனிற்காகவும் தன்னுடைய வாழ்த்துகளையும் அவர் தெரிவித்து கொண்டார்.

ஆங்கில புது வருட பிறப்பையொட்டி நாட்டு மக்கள் அனைவரும், தங்களுடைய குடும்பத்தினர், நண்பர்களுடன் நகரங்களின் பல்வேறு பகுதிகளுக்கும், மத வழிபாட்டு தலங்களிலும் ஒன்று கூடியுள்ளனர். காலையிலேயே திரளானோர் கோவிலுக்கு சென்று இறைவழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

### சென்னையில் 7-வது நாளாக

# தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட இடைநிலை ஆசிரியர்கள் கைது

**சென்னை, ஜன. 02-**

சென்னையில் 7-வது நாளாக நேற்றும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்ட இடைநிலை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர்.

சமவேலைக்கு சம ஊதியம் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, தொடக்க பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள், சென்னையில் கடந்த சில நாட்களாக தொடர் போராராட்டம் நடத்தி வருகின்றனர். சென்னை எழும்பூர் காந்தி இர்வின் சாலை அருகே, வட்டார கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு நேற்று முன்தினம் 6-வது நாளாக போராட்டம் நடத்தினர். காந்தி இர்வின் மேம்பாலத்தின் ஒருபுறத்தில், இடைநிலை ஆசிரியர்கள் அமர்ந்து போராட்டம் நடத்தினர். தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷம் எழுப்பினர்.

இந்த நிலையில், தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி புத்தாண்டு தினமான நேற்றும் 7-வது நாளாக ஆசிரியர்கள் தொடர் போராட்டம் நடத்தினர். கடந்த தேர்லில் தி.மு.க. கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று முழக்கமிட்டு ஆசிரியர்கள் போராடினர். போராட்டத்தைக் கட்டுப்படுத்த எழும்பூரில் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதனிடையே, போராட்டத்தை கைவிட மறுத்த இடைநிலை ஆசிரியர்களை போலீசார் கைதுசெய்தனர். எனினும், தங்களது கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அவர்கள் தெரிவித்தனர். ஆசிரியர்களின் தொடர் போராட்டம் காரணமாக அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

### அணுசக்தி நிலையங்களின் பட்டியல்:

# இந்தியா-பாகிஸ்தான் தொடர்ந்து 35-வது ஆண்டாக பரிமாற்றம்


**புதுடெல்லி, ஜன. 02-**

இந்தியாவும் பாகிஸ்தானும் தத்தம் நாடுகளில் உள்ள அணுசக்தி நிலையங்கள் குறித்த தகவல்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டன. தொடர்ந்து 35-வது ஆண்டாக பரஸ்பரம் பட்டியல் பகிரப்பட்டுள்ளது.

ஒரு நாடு மற்றொரு நாட்டில் அமைந்துள்ள அணுசக்தி நிலையங்களை தாக்கக் கூடாது என்பதை உறுதிப்படுத்த இந்தியா – பாகிஸ்தான் இடையே கடந்த 1988-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி, தங்கள் நாடுகளில் இருக்கும் அணுசக்தி நிலையங் கள் தொடர்பான விவரங்களை இந்தியாவும் - பாகிஸ்தானும் ஆண்டுதோறும் பரிமாறிக் கொள்ள வேண்டும். இந்த நடைமுறையானது 1991-ம் ஆண்டுஜனவரி27 அமலுக்கு வந்தது. அந்த வகையில், இந்தியாவும் பாகிஸ்தானும் தத்தம் நாடுகளில் உள்ள அணுசக்தி நிலையங்கள் குறித்த தகவல்களை இன்று பரஸ்பரம் பரிமாறிக் கொண்டன. டெல்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரியிடம் மத்தியவெளியவுறவுத் துறை அமைச்சகமும், இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரியிடம் பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சகமும் இந்தப் பட்டியல்களை ஒப்படைத்தன. தொடர்ந்து 35-வது ஆண்டாக பரஸ்பரம் பட்டியல் பகிரப்பட்டுள்ளது. இந்தியா - பாகிஸ்தான் இடையேயான உறவு முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ள நிலையிலும் இருநாடுகளும் ஒப்பந்தத்தை மதித்து அணுசக்தி பட்டியலை பகிர்ந்துள்ளன.

# வீட்டின் முன்பு கூடிய ரசிகர்களுக்கு புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தார் ரஜினி

**சென்னை, ஜன. 02-**



சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்துக்கு புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் பொருட்டு சென்னை போயஸ் கார்டனில் உள்ள அவரது இல்லத்தின் முன்பு ரசிகர்கள் நேற்று திரண்டனர். நடிகர் ரஜினியும் வெளியே வர, கூடியிருந்த ரசிகர்கள் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். ரஜினியும் உடனே ரசிகர்களைப் பார்த்து கையசைத்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

நீண்ட நேரம் காத்திருந்த ரசிகர்கள் ரஜினியைப் பார்த்தபிறகு மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றனர். புத்தாண்டையொட்டி அரசியல் தலைவர்கள், திரை பிரபலங்கள் பலரும் மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர். மேலும் தான் நடித்த 'முத்து' படத்தில் உள்ள வசனத்தைப் பகிர்ந்து ரஜினி புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



2026-ல் தமிழ்நாட்டுக்கு ஒரு மாற்றம் வரும். இதுவரை தமிழ்நாடு கண்டிராத தேர்தல் வெற்றியாக 2026 தேர்தல் இருக்கும். நிச்சயம் கூட்டணி அமைச்சரவை அமைய வாய்ப்பு இருக்கிறது. மாற்றங்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது தமிழ்நாடு மக்களுக்கு பயனளிக்கக்கூடியதாக இருக்கும்.

**- பிரேமலதா**



ஒருவாரகாலமாக தலைநகரில் போராடிவரும் இடைநிலை ஆசிரியர்கள் வேலை நிறுத்த போராட்டத்துக்கு சென்றுவிடாமல் இருக்க பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும், தமிழக முதல்வரும் உடனடியாக தலையிட்டு ஆசிரியர்கள் சங்கங்களின் நிர்வாகிகளை அழைத்துப் பேசி அவர்களின் நியாயமான கோரிக்கைகளை உடனே நிறைவேற்ற வேண்டும்.

**- ராமதாஸ்**



தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உ.பி. பொருளாதாரத்துடன் ஒப்பிடுவது பிழை. ஒரு மாநிலத்தின் மொத்தக்கடனை வைத்து அந்த மாநிலத்தின் பொருளாதார நிலையை மதிப்பிடுவது என்பது பிழையானது. இந்தியாவின் மொத்தக் கடனும் எல்லா மாநிலங்களின் மொத்தக் கடன்களும் ஆண்டுதோறும் கூடுகின்றன. இது இயல்பு.

**- ப.சிதம்பரம்**



சம வேலைக்கு சம ஊதியம்' என்ற முழக்கத்தை ஏந்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இடைநிலை மற்றும் பகுதிநேர ஆசிரியர்களுக்கு ஒரு விடியல் எப்போது? இடைநிலை மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் உட்பட அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு உடனே நிறைவேற்ற வேண்டும்.

**- ஆதவ் அர்ஜுனா**



சென்னை துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அய்யா முதலி தெருவில் 18 குடும்பங்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீடு ஆணையை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். இதில் மேயர் ஆர்.பிரியா, வட்டாரதுணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டல குழு தலைவர் ஸ்ரீராமுலு, கண்காணிப்பு பொறியாளர் இளம்பருதி, மண்டல அலுவலர் விஜய்பாபு கலந்துகொண்டனர்.



**ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு தமிழ் மாநில காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் தலைவர் ஜி.கே.வாசன் எம்பிக்கு மாநில அமைப்பு செயலாளர் சைதை மனோகரன் ரூபாய் நோட்டு மாலை அணிவித்து புத்தாண்டு வாழ்த்து பெற்றார். அருகில் மாவட்ட தலைவர் திருச்சி குணா, மாநில நிர்வாகிகள் சைதை நாகராஜன், கிண்டி மம்மு, கோட்டூர் மதனகோபால், சின்னமலை சுப்பிரமணி, ரவிராஜன், ஐயம்பெருமாள், குமார், இராஜேந்திரன், இருதயராஜ் உள்ளனர்**




**சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், 31 ந் தேதி அன்று இரவு, சென்னை பெருநகர காவல் அதிகாரிகளுடன் சென்னை மெரினா கடற்கரை, காமராஜர் சாலை உள்ளிட்ட இடங்களில், புத்தாண்டு கொண்டாட்ட பாதுகாப்பு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு, பின்னர் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு உழைப்பாளர் சிலை அருகே, குழந்தைகள், பொதுமக்கள், காவல் அதிகாரிகள், காவலருடன் கேக் வழங்கி, புத்தாண்டு வாழ்த்துக்களை பரிமாறினார்.**

# சென்னை வால்டாக்ஸ் சாலையில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் ரூ 1.15 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடம்

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்



**சென்னை,ஜன.02**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் தலைவருமானபி.கே.சேகர்பாபு அவர்கள், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்.தயாநிதி மாறன், இராயபுரம் மண்டலம், வார்டு-57, வால்டாக்ஸ் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளியில், மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூபாய் 1.15 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகள் கட்டடத்தினை திறந்து வைத்து, மாணவர்களுடன் கலந்துரையாடி இனிப்புகளை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் பள்ளியில் பயிலும் 172 மாணவர்களுக்கு புத்தகப்பை, நோட்டுகள், குடிநீர் பாட்டில், பேனா, உள்ளிட்ட பொருட்களை வழங்கினார்.இந்த கூடுதல் வகுப்பறைகள் கட்டடமானது, 2,052 சதுர அடி பரப்பளவு கொண்டதாகும். மேலும், தரை தளத்தில் 2 வகுப்பறைகள், முதல் தளத்தில் 2 வகுப்பறைகள் என மொத்தம் 4 வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் என அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர். பிரியா, மாநகராட்சி ஆணையர்ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர்பி.ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள்.ல. நவீன், .வெ. பரிமளம், ராஜேஷ் ஜெயின், மண்டல அலுவலர் விஜய் பாபு, செயற்பொறியாளர் சிவப்பிரகாசம் கலந்து கொண்டனர்.

# 8கிலோ கஞ்சா பறிமுதல்: சிறுவன் உட்பட இருவர் கைது

**சென்னை ஜன 02-**

திருவான்மியூர் பேருந்து நிலையம் அருகே 8 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்த நிலையில், 17 வயது சிறுவன் உட்பட இருவரை கைது செய்தனர்.

**கஞ்சா பறிமுதல்**

திருவான்மியூர் பேருந்து நிலையம் அருகே போலீசார் நேற்று முன் தினம் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, மூட்டையுடன் வந்த 2 வடமாநில இளைஞர்களிடம் விசாரித்தனர். அப்போது, இருவரும் முன்னுக்கு பின் முரணாக பேசினார். இதனால், சந்தேகமடைந்த போலீசார் மூட்டையை பிரித்து பார்த்தபோது 8 கிலோ கஞ்சா சிக்கியது.

இதையடுத்து, கஞ்சாவை பறிமுதல் செய்த போலீசார் இருவரையும் காவல் நிலையம் அழைத்து சென்று விசாரித்தனர். அதில், திரிபுரா மாநிலத்தைச் சேர்ந்த முகமது ஷாஜகான்(23) மற்றொருவர் 17 வயது சிறுவன் என தெரியவந்தது. இருவரும் மேற்கு வங்கத்திலிருந்து கஞ்சாவை கடத்தி பூந்தமல்லி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விற்பனை செய்தது தெரியவந்தது. இதையடுத்து, போலீசார் வழக்கு பதிந்து முகமது ஷாஜகானை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். சிறுவனை கெல்லீஸில் உள்ள சிறுவர் சீர்திருத்த பள்ளியில் சேர்த்தனர்.

# மாதவரம் பகுதியில் வீட்டின் கதவை உடைத்து வெள்ளிப்பொருட்கள் மற்றும் பணம் திருடிய 3பேர் கைது

**சென்னை ஜன 02-**

சென்னை, மாதவரம், பொன்னியம்மன்மேடு, வி.பி.சி.நகர் பகுதியில் வசித்து வரும் ஐகோட்டுதுரை, என்பவர் கடந்த 25.ந் தேதி அன்று வீட்டை பூட்டிவிட்டு அவரது குடும்பத்துடன் பழனிமுருகன் கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய சென்ற நிலையில், ஐகோட் துரையை தொடர்பு கொண்டு அவரது வீட்டின் அருகில் வசிக்கும் செண்பகவள்ளி என்பவர் கடந்த 28.ந் தேதி அன்று இரவு அவரின் வீட்டின் பூட்டு உடைந்த நிலையில் உள்ளது என கூறவும், ஐகோட்டு துரை காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்ததின் பேரில் காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று விசாரணை செய்தனர். மேலும் ஐகோட்டுதுரை அவரது வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பீரோவில் வைத்திருந்த வெள்ளிப்பொருட்கள் மற்றும் பணம் ரூ.5,ஆயிரம் திருடு போயிருந்தது தெரியவந்தது. இது குறித்து ஐகோட்டு துரை, மாதவரம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

மாதவரம் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகள் 1.ரிஷிகேஷ், 2.ஜெயந்திநாதன், 3.விக்னேஷ், ஆகிய 3 பேரை கைது செய்தனர். விசாரணையில் எதிரியில் மாதவரம் சுற்றியுள்ள பகுதியில் வீட்டின் பூட்டை உடைத்து திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதும் தெரியவந்தது. அவர்களிடமிருந்து 460 கிராம் வெள்ளி பொருட்கள், பணம் ரூ.500, ஐ குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 ஆட்டோ ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரிகள் ரிஷிகேஷ் கோடம்பாக்கம் காவல் நிலைய சரித்திரப்பதிவேடு குற்றவாளி என்பதும் இவர் மீது ஏற்கனவே 19 குற்ற வழக்குகளும், ஜெயந்திநாதன் மீது 11 குற்ற வழக்குகளும், விக்னேஷ் மீது 8 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# புத்தாண்டையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புளியந்தோப்பு காவல் மாவட்டத்தில் ரவுடிகள் வேட்டை: 33 பேர் கைது

**சென்னை ஜன 02-**

திருவிக நகர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபடுவதாக இன்ஸ்பெக்டர் கிருபாநிதிக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் திருவேற்காடு பகுதியைச் சேர்ந்த சத்யா(எ) சைக்கோ சத்தியா(27), மணி(எ) ரெட்ஹில்ஸ் மணி(21), சூரிய பிரகாஷ்(24), அஸ்வின்(21) ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும், 2 கிலோ கஞ்சா மற்றும் ஒரு ஆட்டோ பறிமுதல் செய்தனர்.எம்கேபி நகர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட முல்லை நகர் சந்திப்பு பகுதியில் தொடர் குற்ற செயல் ஈடுபட்டு வந்த ரெட்ஹில்ஸ் பகுதியைச் சேர்ந்த பிரவீன் குமார்(எ) குள்ள பிரவீன்(21), விக்னேஷ்(எ) மாவு விக்கி(21), ராம்குமார்(21), சுரேஷ்(19), பாலாஜி(19), அபிஷேக்(22) ஆகியோரை போலீசார் கைது செய்தனர். பத்து வலி நிவாரண மாத்திரைகளை பறிமுதல் செய்தனர்.ஆர்.ஆர். நகர் குப்பைமேடு பகுதி அருகே தொடர் குற்ற செயல்களில் ஈடுபட்டு வந்த விஜய்(எ) ஜாக்கி(23), லாரன்ஸ்(எ) வெள்ளை(23), ராஜேஷ்(எ) சொல்யூஷன் ராஜேஷ்(20), ஜெயச்சந்திரன்(20), மற்றும் சரித்திர பதிவேடு ரவுடிகளான பாலாஜி(20), குருமூர்த்தி(19), அஜித்(21) ஆகியோரை கைது செய்துனர்.குட்கா விற்பனையில் ஈடுபட்ட கோழி பாபு(29), அருண்(எ) இமான்(20), நவீன்(எ) புல்லாத்தி(19) ஆகியோரை பேசின்பிரிட்ஜ் போலீசார் கைது செய்தனர். கள்ளச் சந்தையில் மது பாட்டில்கள் விற்ற ஓட்டேரி பழைய வாழை மாநகர் பகுதியை சேர்ந்த குபேந்திரன்(40) என்பவரை கைது செய்தனர். பொதுமக்களை மிரட்டி பணம் பறித்த புளியந்தோப்பு வஉசி நகரைச் சேர்ந்த கருப்பா(எ) ஆபாவாணன்(25), சீனா(எ) அஜித்குமார்(24), ஜீவா(26), அஜித்(32), கிரிதரன்(20), விஜய்(19) ஆகியோரை புளியந்தோப்பு போலீசார் கைது செய்தனர்.பணந்தோப்பு ரயில்வே காலனி பகுதியில் தொடர் குற்ற செயல்களில் ஈடுபட்டு வந்த ஓட்டேரி பழைய வாழைமாநகரைச் சேர்ந்த கலைவேந்தன்(28), கமலேஷ்(19), குணாளன்(21), அருண்(எ) தனுஷ்(21) மற்றும் 17 வயது சிறுவன் ஆகியோரை ஓட்டேரி போலீசார் கைது செய்தனர்.நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த கொரட்டூர் பகுதியைச் சேர்ந்த சாரதி(எ) கோழிமண்டை சாரதி(22) என்ற சரித்திர பதிவேடு ரவுடியை பேசின் பிரிட்ஜ் போலீசார் கைது செய்தனர்.

# ஆலந்தூர் அருகே ஓ.ஜி.கஞ்சா விற்ற 5பேர் கைது

**சென்னை ஜன 02-**

சென்னை புனித தோமையர்மலை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து நேற்று முன் தினம் கிண்டி, கத்திப்பாரா மேம்பாலம், அர்பன் ஸ்கொயர் அருகே கண்காணித்தபோது, அங்கு சந்தேகப்படும்படி கார் மற்றும் இருசக்கர வாகனங்களுடன் நின்றிருந்த 5 பேரிடம் விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் மெத்தம்பெட்டமைன் மற்றும் ஒஜி கஞ்சா ஆகிய போதைப் பொருட்கள் மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.அதன் பேரில், சட்டவிரோதமாக போதைப்பொருட்கள் வைத்திருந்தது தொடர்பாக புனித தோமையர்மலை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, எதிரிகள் 1.வினோத், 2.தினேஷ்குமார்,3.விக்னேஷ்வரன், 4.கார்த்திக், 5.முகமது நிஜாமுதின், ஆகிய 5 பேரை கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து 2.05 கிராம் மெத்தம்பெட்டமைன், 190 கிராம் ஒஜி கஞ்சா, 1 ஐபோன் உட்பட 6 செல்போன்கள், ஆகிய 3 இருசக்கர வாகனங்கள் மற்றும் 1 கார் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட 5 பேரை விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# சென்னையில் விபத்தில்லா புத்தாண்டு கொண்டாட்டம்: மாநகர போலீஸ் தகவல்

**சென்னை ஜன 02-**

சென்னையில் நேற்று முன் தினம் இரவு நடைபெற்ற புத்தாண்டு கொண்டாட்டங்களின்போது விபத்தால் உயிரிழப்புகள் இல்லை என மாநகர காவல்துறை அறிவித்துள்ளது. மாநகர் முழுவதும் 19000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டதுடன் 425 இடங்களில் தடுப்புகள் அமைத்து சிறப்பு கண்காணிப்பு செய்யப்பட்டுள்ளது.

# விக்டோரியா அரங்கை பார்வையிட ரூ.25 கட்டணம் நிர்ணயம்

**சென்னை ஜன 02-**

சென்னை சென்ட்ரலில் உள்ள விக்டோரியா அரங்கை பார்வையிட 18 வயது மேற்பட்டவர்களுக்கு ரூ.25 கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 10 வயது கீழ் உள்ள நபர்களுக்கு கட்டணமில்லை; வெளிநாட்டவர்களுக்கு ரூ.50 கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டது. 60 வயது மேற்பட்டவர்களுக்கும், மாணவர்களுக்கும் விக்டோரியா அரங்கை பார்வையிட ரூ.10 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# பொது இடங்களில் கட்டிடக் கழிவுகளை கொட்டினால் டன்னுக்கு ரூ.5 ஆயிரம் அபராதம்: மாநகராட்சி உத்தரவு

சென்னை மாநகராட்சி சார்பில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலில் கூறியிருப்பதாவது: 'கட்டுமானம் மற்றும் இடிபாடு கழிவுகளை அங்கீகாரமின்றி கொட்டுவதை கண்டறியப்பட்ட உடனே குற்றத்தில் ஈடுபட்ட வாகனம் அமலாக்கத்துறையினரால் உடனடியாக பறிமுதல் செய்யப்படும். கட்டுமானக் கழிவுகளின் அளவை அடிப்படையாக கொண்டு ஒரு டன்னுக்கு ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.இந்த நிலையான நடைமுறை உடனடியாக அமலுக்கு வருவதுடன், சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் கட்டாயமாக அமல்படுத்தப்படும். அனைத்து கட்டுமான நிறுவனங்கள், ஒப்பந்ததாரர்கள், வாகன இயக்குனர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கட்டிடம் மற்றும் இடிபாடு கழிவுகளை சென்னை மாநகராட்சி ஒதுக்கியுள்ள மையங்களில் மட்டுமே ஒப்படைக்க வேண்டும். இதனை மீறுவோருக்கு எந்த விதிவிலக்கும் இன்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது

# போதை மாத்திரைகள் விற்பனை செய்த 3 பேர் கைது

**சென்னை,ஜன.02**

போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிபடை மற்றும் மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து நேற்று முன் தினம் காலை, காரணிஷ்வரர் கோயில் வீதியில் கண்காணித்த போது அங்கு மூவர் மெத்தம்பெட்டமைன், எஸ்.டி ஸ்டாம்பு மற்றும் எம்.டி.எம்.ஏ போதை மாத்திரைகள் ஆகிய போதைப்பொருட்களை விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், மயிலாப்பூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்டவிரோதமாக போதைப்பொருட்கள் வைத்திருந்த எதிரிகள் 1.ஹரிஷ், மயிலாப்பூர், 2.வசந்தகுமார், 3.சாய்ஸ்ரீசரண், ஆகிய 3 மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3 கிராம் மெத்தம்பெட்டமைன், 17 கிராம் ஓ ஜி கஞ்சா, 1 எல்.எஸ்.டி ஸ்டாம்பு, 16 எம்.டி.எம்.ஏ மாத்திரைகள், 4 செல்போன்கள் மற்றும் 1 இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி ஹரிஷ் ஏசி மெக்கானிக் வேலை செய்து வருவதும், வசந்தகுமார் இருசக்கர வாகனம் ஓட்டி வருவதும், சாய் ஸ்ரீசரண் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருவதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட 3 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# 48.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, செங்கல்பட்டு, சேலம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் செயற்கை இழை ஓடுதளப்பாதை மறுசீரமைக்கும் பணி, சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்



**சென்னை,ஜன.02**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 8.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணியினை காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம் கீரப்பாக்கம் கிராமத்தில் 17.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி அமைக்கும் பணி, சேலம் மாவட்ட பல்நோக்கு விளையாட்டு வளாகத்தில் 11.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதள பாதை அமைக்கும் பணி, இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 12.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை அமைக்கும் பணி என மொத்தம் 48.76 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உலகின் எப்பகுதியில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ள பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றார். இந்த அறக்கட்டளை நிதியின் கீழ் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்களுக்கு தேவையான அதிநவீன விளையாட்டு உபகரணங்களை வாங்கி கொள்ளவும், தேசிய, சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவு, தங்குமிடம், பயிற்சி பெறுதல், பயணத்திற்கான செலவுகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

அதனடிப்படையில் தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்கேற்ற மற்றும் பதக்கங்களை வென்ற வீரர், வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வகையில் தயார் செய்யவதற்காக தடகள வீரர்கள் ர.மானவ், ஜெ.ஆதர்ஷ் ராம், கூடைப்பந்தாட்ட வீரர் பி. ஃபியோடர் ஆதித்தன், குத்துச் சண்டை வீரர் பி.தர்ஷன், தடகள வீரர் யோபின், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வாலிபால் வீராங்கனைகள் ம.ராகஸ்ரீ , பா. சாதனா ஆகிய விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட மொத்தம் 2,80,000/- ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மேலும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற சைக்கிளிங் வீரர்கள் ச.பிரனேஷ் மற்றும் சௌ.கவிஷ் ஆகியோருக்கு மொத்தம் 12,48,580/- மதிப்பிலான சர்வதேச தரத்திலான சைக்கிள் மற்றும் உபகரணங்களை வழங்கினார்.

தொடர்ந்து சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று வரும் நீச்சல் வீர்ர் உ. அபிஷேக்கிற்கு மலேசியாவிற்கு சென்று பயிற்சி மேற்கொள்வதற்காக ரூ.35,000/- க்கான காசோலையை துணை முதலமைச்சர் வழங்கினார்.

இன்றைய தினம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியின் கீழ் மொத்தம் 15,63,580/- ரூபாய் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பயிற்சிக்கான உதவித்தொகை காசோலைகளை வழங்கினார்.

பல்வேறு சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வென்ற ஸ்னூக்கர், பில்லியர்ட்ஸ், ரோல் பால் மற்றும் பூப்பந்தாட்ட விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் இன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை சந்தித்து தாங்கள் வென்ற பதங்கங்கள் மற்றும் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர். இரா. ராஜேந்திரன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்.தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள்.காதர்பாட்சா முத்துராமலிங்கம், இ.பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர். ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# ஈரோட்டில் களை கட்டிய புத்தாண்டு கொண்டாட்டம்: தங்கும் விடுதிகளில் இரவில் போலீசார் தீவிர சோதனை



**ஈரோடு, ஜன.2-**

உலகம் முழுவதும் 2026 ஆம் ஆண்டு புத்தாண்டை நள்ளிரவில் மக்கள் கோலாகலமாக வரவேற்றனர். அதன்படி ஈரோடு மாநகர் பகுதியில் உள்ள பன்னீர் செல்வம் பார்க்கில் உள்ள சி எஸ் ஐ பிரப் தேவாலயத்தின் முன்பாக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இரவு முதல் குவியத் தொடங்கினர்.

மேலும் புத்தாண்டை ஒளிபரப்பும் விதமாக தேவாலயத்தின் முகப்பில் எல்இடி திரைகள் அமைக்கப்பட்டு இருந்தது. இதை எடுத்து நள்ளிரவு 12 மணிக்கு எல்ஈடி திரையில் உள்ள எண்கள் 2025-ல் இருந்து 2026 -க்கு மாறியது. அப்போது அங்கு கூடியிருந்த மக்கள் ஹேப்பி நியூ இயர் என உற்சாக முழக்கம் எழுப்பியவாறு புத்தாண்டை வரவேற்றனர். மேலும் வானில் வண்ண பலூன்களை பறக்கவிட்டும் விசில் அடித்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இன்னும் சிலர் ஒருவருக்கொருவர் ஆறத் தழுவி புத்தாண்டை வரவேற்றனர்.பின்னர் கேக்குகள் வெட்டி பகிர்ந்து ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். மாவட்ட காவல்துறை சார்பில் போலீஸ் சூப்பிரண்டு சுஜாதா தலைமையில் போலீசார் பொதுமக்களுடன் கேக் வெட்டி புத்தாண்டை வரவேற்றனர்.புத்தாண்டை கிறிஸ்தவ தேவாலயங்களில் நள்ளிரவில் சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.இதைப்போல் மாவட்டத்தில் கோவில்களில்நேற்று அதிகாலை முதலிலே பணியை பொறுப்படுத்தாமல் பூத்தாடைகள் அணிந்து மக்கள் புத்தாண்டை ஒட்டி சாமி தரிசனம் செய்தனர். கேளிக்கை விடுதி பெரிய பெரிய விடுதிகளிலும் புத்தாண்டு கொண்டாட்டம் களை கட்டியது.

இதை அடுத்து ஈரோடு மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் நேற்று சுற்றுலா பயணிகள் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. கோபி செட்டிபாளையத்தில் உள்ள கொடிவேரி அணை, பவானி சாகரில் உள்ள பூங்கா, தாளவாடி, ஆசனூர் திம்பம் மலைப்பகுதிகளில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக இருந்தது.சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் கோவிலில் அதிகாலை முதலே பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. புத்தாண்டை சிறப்ப அபிஷேகமும் ஆராதனைகளும் நடைபெற்றது.புத்தாண்டு கொண்டாட்டத்தில் அசம்பாவிதங்கள் நடைபெறாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்டம் முழுவதும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடம், வழிப்பாட்டு தளங்கள், சுற்றுலா தளங்களில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.இதை போல் ஈரோடு பஸ் நிலையம் ரயில் நிலையத்திலும் போலீசார் தீவிர கணபதி ஈடுபட்டனர். சோதனை சாவடிகளும் உஷார் படுத்தப்பட்டு வாகனங்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டன. சில வாலிபர்கள் உற்சாகம் மிகுதியில் மோட்டார் சைக்கிளில் சத்தம் எழுப்பியவாறு சென்றனர். அவர்களை போலீசார் பிடித்து அறிவுரை கூறிய அனுப்பி வைத்தனர்.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஈரோடு மாவட்டத்தில் உள்ள தங்கும் விடுதியில் போலீசார் இரவு முழுவதும் தீவிர ஆய்வு மேற்கொண்டனர். விடுதியில் வருகை பதிவேடுகளை சரிபார்த்தனர். சந்தேகப்படும் நபர்கள் யாரேனும் வந்தார்களா என்பது குறித்தும் சோதனை செய்தனர். அவ்வாறு புது நபர்கள் வந்தால் போலீசுக்கு தகவல் தெரிவிக்க வலியுறுத்தினர். மாவட்டம் முழுவதும் உள்ள தங்கும் விடுதிகளில் இரவு முழுவதும் போலீசார் தீவிர சோதனைகள் ஈடுபட்டனர்.கோபிசெட்டிபாளையம், பவானி பெருந்துறை அந்தியூர் சத்தியமங்கலம் கொடுமுடி மொடக்குறிச்சி மாவட்டம் முழுவதும் புத்தாண்டு கொண்டாட்டம் களை கட்டியது.



ஊட்டி ராஜ்பவனில் தங்கி இருக்கும், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை நீலகிரி ஆரிகவுடர் விவசாயிகள் சங்க தலைவர் மஞ்சை.வி.மோகன் தலைமையில் நிர்வாகிகள் நடராஜன், யோஜன், வாசு, ராஜன் , பூபதிகண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் நேற்று சந்தித்து புத்தகம் வழங்கி புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்தனர். அப்போது அவர்களிடம் ஆளுநர் நீலகிரி தேயிலை விவசாயிகளின் இன்றைய நிலவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

## பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 38 கன அடியாக குறைந்தது

**ஈரோடு, ஜன.2 -**

ஈரோடு , கரூர், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், 2.47 லட்சம் விளை நிலங்களின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்டபவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி இருந்து வருகிறது. கடந்த சில நாட்களாக பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து குறைந்து வருகிறது. அதேநேரம் பாசனத்துக்கு நீர்வரத்தை விட அதிக அளவில் தொடர்ந்து நீர் வெளியேற்றப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 97.37 அடியாக குறைந்துள்ளது. நேற்று காலை அணைக்கு வரும் நீர்மட்டம் 38 கன அடியாக சரிந்தது.கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. தடப்பள்ளி - அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 700 கன அடியும், பவானி ஆற்றுக்கு 100 கன அடியும் திறக்கப்பட்டுள்ளது. மொத்தம் பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்திற்காக 800 கன அடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி அணையின் முழு கொள்ளளவான 41.75 அடியில் தொடர்ந்து நீடித்து வருகிறது. எட்டியது. பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 30.38 அடியாக உள்ளது. வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 28.67 அடியாக உள்ளது.

## ஈரோட்டில் 2 வாலிபர்கள் மீது குண்டாஸ்

**ஈரோடு, ஜன.2 -**

ஈரோடு சோலார் பாலுசாமி நகரை சேர்ந்த மகேஸ்வரன் (28). தற்போது 19 ரோடு ஏ.கே.எம் நகர் குடில் காலனியில் வசித்து வருகிறார். கஞ்சா விற்று தொடர்பாக வீரப்பன்சத்திரம் போலீசார் இவர் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்தனர். இவர் மீது 22 குற்ற வழக்குகள் உள்ளன. இவரைக் குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என எஸ் பி சுஜாதா ஈரோடு கலெக்டர் கந்தசாமிக்கு பரிந்துரைத்தார். கலெக்டர் பரிசீலனை செய்து குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். இது அடுத்து மகேஸ்வரன் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.இதேபோல் ஈரோடு வீரப்பன்சத்திரம் சக்தி ரூட்டை சேர்ந்த லோகேஸ்வரன் (28) தற்போது நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் எஸ்பிபி காலனி தாஜ் நகரில் வசித்து வருகிறார். இவரை கஞ்சா விற்றது தொடர்பாக சில தினங்களுக்கு முன் கருங்கல்பாளையம் போலீசார் கைது செய்தனர்.இவர் மீது 28 குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவரை குண்டாசில் சிறையில் அடைக்க வேண்டும் என எஸ்.பி சுஜாதா பரிந்துரையின் பெயரில் கலெக்டர் கந்தசாமி சிறையில் அடைக்க உத்தரவிட்டார். லோகேஸ்வரன் கோவில் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

### தாளவாடி அருகே
## 2 ஏக்கரில் பயிரிட்டு இருந்த ராகி - மக்காச்சோளத்தை சேதப்படுத்திய யானைக் கூட்டங்கள் விவசாயிகள் வேதனை

**தாளவாடி, ஜன.2 -**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், ஆசனூர் வனக்கோட்டம், கேர்மாளம் வனச்சரகத்துக்கு உட்பட்ட பேடர்பாளையம் பகுதியில் தொடர்ந்து ஒரு வார காலமாக யானைக் கூட்டங்கள் சுற்றித்திரிந்து விளை நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தியும், விவசாயிகளை அச்சுறுத்தியும் வருகிறது.

நேற்றுமுன்தினம் இரவு நள்ளிரவு 5-க்கும் மேற்பட்ட யானைகள் மாதேவப்பா என்பவரது தோட்டத்தில் புகுந்து மக்காசோளம் மற்றும் ராகி ஆகிய பயிர்களை தின்றும், மிதித்தும் அட்டகாசத்தில் ஈடுபட்டு சேதம் செய்துள்ளது. ராகி மற்றும் மக்காச்சோள பயிர்கள் அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில் சுமார் இரண்டு ஏக்கர் நிலத்தில் பயிர்களை தின்றும், மிதித்தும் சேதம் செய்துள்ளது.

இது குறித்து தகவலறிந்த கேர்மாளம் வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வையிட்டனர். தொடர்ந்து இந்த கிராமத்தில் யானைகள் அட்டகாசம் தொடர்வதால் வனத்துறை அதிகாரிகள் இந்த பகுதியிலேயே முகாமிட்டு யானைகளை விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், வன விலங்குகள் விளை நிலங்களுக்குள் வராமல் தடுக்க அகழிகள் அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பயிர்சேதம் அடைந்த விவசாயிக்கு வனத்துறை நிவாரணம் வழங்க வேண்டும் என அப்பகுதி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

## புதுவருட பிறப்பு: ஊட்டி கோவில்களில் சிறப்பு பூஜை: திரளான பக்தர்கள் சாமி தரிசனம்



**ஊட்டி, ஜன.02-**

புத்தாண்டையொட்டி ஊட்டி கோவில்களில் நடைபெற்ற சிறப்பு பூஜைகளில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இது மார்கழி மாதம் ஆகும். இந்த மாதத்தில் பெரும்பாலான கோவில்கள் காலையில் விடிவதற்கு முன்பே 5 மணிக்கொல்லாம் கோவில் நடை திறக்கப்பட்டு பூஜைகள் நடத்தப்படும். இம்மாதத்தில் தான் ஆங்கிலப் புத்தாண்டும் பிறப்பதால் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் காலையிலேயே பக்தர்கள் குளித்து முடித்து கோவில்களுக்கு சென்று வழிபட்டு வருவர்.

அதன்படி புத்தாண்டு-2026 நேற்று பிறந்தது. அதனையொட்டி ஊட்டியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோவில், சுப்ரமணியர் கோவில், ஐயப்பன் கோவில், பெருமாள் கோவில், எல்க்ஹில் முருகன் கோவில், காசி விஸ்வநாதர் கோவில் உள்ளிட்ட கோவில்களில் காலையில் இருந்தே பொதுமக்கள் கோவில்களுக்கு வரத்தொடங்கினர்.

நேற்று காலையில் பனியின் தாக்கம் சற்று அதிகமாக இருந்தது. இருந்தாலும் காலையிலேயே பக்தர்களுக்கு கோவில்களுக்கு செல்ல தொடங்கினர். காலை வேளையில் கூட்டம் சற்று குறைவாக இருந்தாலும், நேரம் செல்ல செல்ல பக்தர்களின் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. ஆகையால் பக்தர்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். இந்தாண்டு அனைத்து கஷ்டங்களும் மறைந்து இன்று போல் இந்தாண்டு முழுவதும் புத்துணர்ச்சியோடு இருக்கவேண்டும், பிறந்துள்ள புத்தாண்டில் உலகில் சண்டையில்லாத ஆண்டாக இருக்கவேண்டும் என வேண்டிக்கொண்டதாக பக்தர்கள் தெரிவித்தனர்.

# ஊட்டி தேவாலயங்களில் இரவு நேர சிறப்பு திருப்பலி: திரளான கிறிஸ்தவர்கள் பங்கேற்பு



**ஊட்டி, ஜன.02-**

ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு ஊட்டியில் உள்ள தேவாலயங்களில் நடைபெற்ற இரவு நேர சிறப்பு திருப்பலியில் திரளான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.


2025-ம் ஆண்டு முடிந்து 2026-ம் ஆண்டு நேற்று முன்தினம் பிறந்து விட்டது. இதையொட்டி நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் பகுதிகளில் 1000-க்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று திரண்டு புத்தாண்டை வரவேற்றார்கள். சரியாக நள்ளிரவு 12 மணி வந்ததும் கூடியிருக்கும் மக்கள் உற்சாகமாக புத்தாண்டை வரவேற்று ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை தெரிவித்தனர். மேலும் இரவு நேரத்தில் சிலர் சாலையில் ஆங்காங்கே கேக் வெட்டி வாகன ஓட்டிகளுக்கு கொடுத்து மகிழ்ந்தனர்.

இந்தநிலையில் புத்தாண்டையொட்டி நள்ளிரவு 12 மணி அளவில்; கிறிஸ்தவ தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றது. இதன்படி நள்ளிரவு, 12 மணிக்கு தேவாலயங்களில் கூடியிருந்த கிறிஸ்துவ மக்கள், புத்தாண்டு வாழ்த்து பாடல்கள் பாடி, கொண்டாடினர்.

இதன் ஒரு கட்டமாக ஊட்டி சேரிங்கிராஸ் கார்டன் பகுதியில் அமைந்துள்ள நூற்றாண்டு பழமை வாய்ந்த திரு இருதய ஆண்டவர் பேராலயத்தில் ஊட்டி மறை மாவட்ட ஆயர் அமல்ராஜ் தலைமையில், பங்குத்தந்தை ரவி லாரன்ஸ், உதவி பங்கு தந்தை ஜெய்சன் ஆகியோர் முன்னிலையில் இரவு நேர சிறப்பு திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

இந்த திருப்பலியில் உலக அமைதிக்காவும், உலக மக்கள் நலன் பெறவும், அனைத்துலக மக்களுக்காகவும் சிறப்பு பிரார்த்தனை மேற் கொள் ளப் பட் டது. மேலும் பிறந்திருக்கும் புத்தாண்டில் மக்கள் பேரிடர்களிலிருந்தும் பாதுகாப்பாக இருக்கவும் சிறப்பு பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டது. இதேபோல் குன்னூர், கோத்தகிரி, கூடலூர் உட்பட நீலகிரியில் உள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களும் இரவு நேர சிறப்பு திருப்பலி நடைபெற்றது. ஊட்டியில் நிலவிய கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் கிறிஸ்தவர்கள் இந்த திருப்பலியில் பங்கு கொண்டு புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

# ஈரோடு கோட்டை கஸ்தூரி அரங்கநாதர் கோவிலில் சொர்க்கவாசல் திறப்பு: ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்



ஈரோடு, ஜன.2-

ஈரோடு மாநகர் பகுதியில் பிரசித்தி பெற்ற கோட்டை கஸ்தூரி அரங்கநாதர் கோவில் உள்ளது. பழமை வாய்ந்த இக்கோவிலில் வைகுண்ட ஏகாதசி விழா ஆண்டு தோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, இந்த ஆண்டுக்கான விழா கடந்த 20-ம் தேதி பகல் பத்து உற்சவ நிகழ்ச்சியுடன் துவங்கியது.

அதைத்தொடர்ந்து விழாவின் முக்கிய நிகழ்வான ஈரோடு கோட்டை கஸ்தூரி அரங்கநாதர் கோவிலில், சொர்க்கவாசல் திறப்பு கோலாகலமாக நடைபெற்றது. இதனையொட்டி, நேற்று அதிகாலை, 3 மணிக்கு கஸ்தூரி அரங்கநாதருக்கு திருமஞ்சனமும், தீபாராதனையும், சிறப்பு வழிபாடும் நடைபெற்றது. தொடர்ந்து, காலை, 4.30க்கு சொர்க்க வாசல் திறப்பும், சுவாமி திருவீதி உலாவும் நடைபெற்றது. இதில், பூதேவி, ஸ்ரீதேவியுடன் பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.சொர்க்கவாசல் திறப்பையொட்டி, அதிகாலை, 2 மணி முதலே, பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். அப்போது அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் ''கோவிந்தா கோவிந்தா'' என்று பக்தி கோஷம் எழுப்பியவாறு சாமியை வழிபட்டு சொர்க்க வாசல் வழியாக சென்றனர். கடும் பனியையும் பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு வந்து சாமியை வழிபட்டார்கள். விழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு கோவில் கமிட்டி சார்பில் லட்டு பிரசாதம் வழங்கப்பட்டது. மேலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. கூட்டத்தை சமாளிக்கும் வகையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். அந்தப் பகுதியில் போக்குவரத்து மாற்றி விடப்பட்டது. தி.மு.க கவுன்சிலர் பழனியப்பா செந்தில்குமார், முன்னாள் எம்எல்ஏ கே. எஸ் தென்னரசு

செயல் அலுவலர் அஞ்சுகம் (பொறுப்பு) அறங்காவலர் குழு தலைவர் கர்சீப் சுப்பிரமணியம், அறங்காவலர்கள் டாக்டர் சுந்தர ராஜ், ராவணன், அரிகரன், ராணி முன்னாள் கவுன்சிலர் விஜயபாஸ்கர் உள்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு ஆதிசங்கர் சமூக நல அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு மக்கள் உரிமை மீட்பு மையம் சார்பில் நிறுவனத் தலைவர் என்.டி.சிவலிங்கன் தலைமையில் 50 மகளிர்களுக்கு இலவச அரிசி, சேலைகள் வழங்கப்பட்டது. கவிதா உள்ளிட்ட அறக்கட்டளை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில்
## தாயுமானவர் திட்டத்தின் மூலம் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே நேரடியாக வரும் 4,5ம் தேதி பொருட்கள் வழங்கப்பட உள்ளது
### கலெக்டர் ச.தினேஷ் குமார் தகவல்

**கிருஷ்ணகிரி,ஜன.02-**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தாயுமானவர் திட்டத்தின் மூலம் 04.01.2026 மற்றும் 05.01.2026 ஆகிய நாட்களில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே நேரடியாக சென்று குடிமைப் பொருட்கள் வழங்கப்பட உள்ளது என கலெக்டர் ச.தினேஷ் குமார் தகவல். தமிழ்நாடு முதலமைச்சர் தாயுமானவர் திட்டம் மூலம் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று குடிமைப் பொருட்கள் வழங்கும்திட்டத்தினை 12.08.2025 ஆம் தேதி துவக்கி வைத்தார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டம் கூட்டுறவுத் துறையின் கீழ், செயல்படும் நியாய விலைக் கடைகளில் உள்ள 28,132 வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்ப அட்டைகளுக்கு தாயுமானவர் திட்டத்தின் மூலம் அவர்களின் வீடுகளுக்கு சென்று குடிமைப் பொருட்கள் வழங்க ஒரு நாள் குழு 155 மற்றும் இரண்டு நாள் குழு 154 என மொத்தம் 309 குழு அமைக்கப்பட்டு, 463 வாகனங்களை கொண்டு விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜனவரி 2026 ஆம் திங்களில் 04.01.2026 மற்றும் 05.01.2026 ஆகிய இரு நாட்களில் தாயுமானவர் திட்டத்தின் மூலம் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்ப அட்டைகளுக்கு விநியோகம் செய்யப்படும் என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

## நீலகிரி மாவட்டத்தில் 736 வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம் வரும் 3,4-ந் தேதிகளில் நடக்கிறது

**ஊட்டி, ஜன.02-**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் படி, சிறப்பு தீவிரத்; திருத்தம், 2026- ஆனது கடந்த 04.11.2025 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் உள்ள 736 வாக்குச்சாவடி மையங்களில் 03.01.2026 (சனிக்கிழமை) மற்றும் 04.01.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.


சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ள நாட்களில் 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள (படிவம் 6), இறந்த மற்றும் இடம்பெயர்ந்த வாக்காளரின் பெயரை நீக்கம் செய்ய (படிவம் 7) முகவரி மாற்றம் மற்றும் திருத்தம் செய்ய (படிவம் 8) ஆகிய படிவங்களை சிறப்பு முகாம் நடைபெறும் நாட்களில், அனைத்து விவரங்களையும் சரியாக பூர்த்தி செய்து, படிவங்களை அளித்து இறுதி வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை தக்க வைத்துக் கொள்ளுமாறு மாவட்ட கலெக்டரால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்து:

# 2026-ல் மட்டும் நடைபெறும் 3 உலகக்கோப்பை போட்டிகள்







**மும்பை, ஜன. 02-**

புதியதாக பிறந்துள்ள 2026-ம் ஆண்டு கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்து படைக்க காத்திருக்கும் ஆண்டாகவே அமைந்திருக்கிறது. 2025 ஆம் ஆண்டு நிறைவடைந்து 2026 ஆம் ஆண்டு பிறந்திருக்கிறது. காலண்டர் மாறியிருந்தாலும், மாறாத கிரிக்கெட் ரசிகர்களுக்கும் இந்திய கிரிக்கெட் அணிக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகவே மாறியிருக்கிறது. ஐ.சி.சி. டி20 உலகக் கோப்பையைத் தக்கவைக்கும் முனைப்பில் இந்திய ஆடவர் அணியும், ஒருநாள் உலகக் கோப்பை வென்ற வேட்கையுடன் டி20 உலகக் கோப்பையை வெல்ல முனைப்புக் காட்டும் மகளிர் அணியும், இளம் வீரர்களுக்கான உலகக் கோப்பையும் நம்மை மகிழ்விக்க காத்திருக்கின்றன.

**டி20 உலகக் கோப்பை:**

இந்தியா மற்றும் இலங்கையில் தொடங்கும் டி20 உலகக் கோப்பைத் தொடர் வருகிற பிப்ரவரி 7 ஆம் தேதி தொடங்கி மார்ச் 8 ஆம் தேதி வரை நடைபெறவிருக்கிறது. நடப்பு சாம்பியனான இந்திய அணி, டி20-ல் வலுவான அணியாக இருப்பதாலும், உள்ளூர் போட்டிகள் நடைபெறுவதும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுமா என ரசிகர்கள் ஆரவாரத்தில் உள்ளனர். டி20 அணி வலுவாக இருந்தாலும், கேப்டன் சூர்யகுமார் யாதவின் ஆட்டம் மோசமான நிலையில் இருப்பதால், அவரின் பதவியை தீர்மானிக்கும் தொடராகவும் இந்த உலகக் கோப்பைத் தொடர் அமைந்திருக்கிறது.

**மகளிர் உலகக் கோப்பை:**

ஜனவரி 9 மகளிருக்கான பிரீமியர் லீக் தொடங்குகிறது. அதைத் தொடர்ந்துதான் ஆடவருக்கான உலகக் கோப்பை போட்டிகள் நடைபெறுகின்றன. ஜூன் 12 ஆம் தேதி ஐ.சி.சி. மகளிருக்கான டி20 உலகக் கோப்பை போட்டிகள் இங்கிலாந்தில் தொடங்கவிருக்கின்றன. ஒருநாள் உலகக் கோப்பை வென்ற அதே வேகத்தில் டி20 உலகக் கோப்பையை வெல்ல இந்திய மகளிரணியும் முனைப்புக் காட்டி வருகிறது.

**அண்டர்-19 உலகக்கோப்பை:**

இந்திய அணியின் எதிர்கால நட்சத்திரங்கள் விளையாடும் 19 வயதுக்குள்பட்டோருக்கான உலகக் கோப்பை ஜிம்பாப்வே மற்றும் நமீபியாவில் நடைபெறுகிறது. இந்தப் போட்டி ஜனவரி 15-ம் தேதி தொடங்கி பிப்ரவரி 6-ம் தேதி வரை நடைபெறுகிறது.

**ஜனவரி மாதத்தில்....**

ஜனவரி மாதத்தில் நியூசிலாந்துடன் ஒரு நாள் போட்டிக்கான அட்டவணை வருமாறு., ஜனவரி 11 – வதோதரா, ஜனவரி 14 – ராஜ்கோட், ஜனவரி 18 – இந்தூர், டி20 போட்டிக்கான போட்டிக்கான அட்டவணை வருமாறு., ஜனவரி 21 – நாக்பூர், ஜனவரி 23 – ராய்ப்பூர், ஜனவரி 25 – கவுகாத்தி, ஜனவரி 28 - விசாகப்பட்டினம், ஜனவரி 31 - திருவனந்தபுரம்.

**பிப்ரவரி மாதத்தில்...**

பிப்ரவரி மாதத்தில் ஐ.சி.சி. டி20 உலகக் கோப்பை தொடருக்கான அட்டவணை: பிப்ரவரி 7 - மார்ச் 8, மார்ச் முதல் மே மாதம் வரை... ஐபிஎல் தொடர், மார்ச் 26 முதல் மே 31 வரை. ஜூலை மாதத்தில்... இங்கிலாந்து சுற்றுப்பயணம் - டி20 போட்டிகள் ஜூலை 1 – ஸ்டர்-லெ-ஸ்ட்ரீட், ஜூலை 4 - மான்செஸ்டர், ஜூலை 7 – நாட்டிங்ஹாம், ஜூலை 9 – பிரிஸ்டல், ஜூலை 11 – சௌத்தாம்ப்டன். ஒருநாள் போட்டிகள் - ஜூலை 14 – பர்மிங்காம், ஜூலை 16 – கார்டிஃப், ஜூலை 19 – லார்ட்ஸ்,

**ஆகஸ்ட் மாதத்தில்...**

ஆகஸ்ட் மாதத்தில்... இலங்கை சுற்றுப்பயணம்: 2 டெஸ்ட் போட்டி: செப்டம்பர் மாதத்தில்... வங்கதேச சுற்றுப்பயணம்: 3 ஒருநாள் போட்டிகள் - 3 டி20 போட்டிகள். செப்டம்பர் – அக்டோபர் - ஆப்கானிஸ்தான் சுற்றுப்பயணம். 3 டி20 போட்டிகள். மேற்கிந்திய தீவுகள் அணியின் இந்தியா வருகை - 3 ஒருநாள் போட்டிகள், 5 டி20 போட்டிகள், அக்டோபர் – நவம்பர் மாதத்தில்... நியூசி. சுற்றுப்பயணம் - 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள், 5 டி20 போட்டிகள்.


**டிசம்பர் மாதத்தில்...**

டிசம்பர் மாதத்தில்... இலங்கை அணியின் இந்தியா வருகை 3 ஒருநாள் போட்டிகள், 3 டி20 போட்டிகள், இந்தாண்டில் மட்டும் இந்திய அணி மொத்தமாக 18 ஒருநாள் போட்டிகளிலும், 29 டி20 போட்டிகளிலும் (உலகக் கோப்பை தொடரைச் சேர்க்காமல்), 4 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவிருக்கிறது. இதனால், 2026 ஆண்டு முழுவதுமே இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு மிகப் பெரிய ஆண்டாகவே அமைந்துள்ளது.

### 2026-ல் கிரிக்கெட் தொடர்கள்:

1) மகளிர் பிரீமியர் லீக் - ஜனவரி 9 - பிப்ரவரி 5.
2) யு-19 உலகக் கோப்பை - ஜனவரி 15 - பிப்ரவரி 6.
3) ஐ.சி.சி. டி20 உலகக் கோப்பை - பிப். 7 - மார்ச் 8.
4) ஐ.பி.எல். 19-வது சீசன் - மார்ச் 26 - மே 31.
5) மகளிர் டி20 உலகக் கோப்பை - ஜூன் 12 - ஜூலை 5.

# நியூசிலாந்து தொடரில் முகமது ஷமி..?



**புதுடெல்லி, ஜன. 02-**

இந்திய அணியில் வேகப்பந்துவீச்சாளர் முகமது ஷமி இடம் பெறுவார் என தகவல் வெளியாகியுள்ளது.

**வரும் 11-ம் தேதி....**

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் மற்றும் 5 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க இருக்கிறது. இதில் முதல் ஒருநாள் போட்டி வரும் ஜனவரி 11ஆம் தேதி தொடங்க உள்ளது. ஜன. 14 மற்றும் 18 ஆம் தேதிகளில் முறையே 2-வது மற்றும் மூன்றாவது ஒருநாள் போட்டி நடைபெறுகிறது. டி20 போட்டிகளை பொறுத்தவரை ஜன.21, 23,25, 28,31 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இதில் டி20 தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. ஒருநாள் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்படவில்லை.

**பரிசீலித்து வருவதாக...**

இந்த நிலையில், ஒரு நாள் தொடருக்கான இந்திய அணியில் வேகப்பந்துவீச்சாளர் முகமது ஷமி இடம் பெறுவார் என கூறப்படுகிறது. ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி இறுதிப் போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக விளையாடி இருந்தார். அதன் பிறகு காயம் மற்றும் பணிச்சுமை காரணமாக முகமது ஷமி இந்திய அணியில் இருந்து விலகி இருந்தார்.இதற்கிடையே 2027-ம் ஆண்டு உலக கோப்பையில் முகமது ஷமியை சேர்ப்பது தொடர்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் ( பி.சி.சி.ஐ.) பரிசீலித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனால், முதல் கட்டமாக அவர் நியூசிலாந்துக்கு எதிராக அடுத்த மாதம் நடைபெற உள்ள ஒருநாள் தொடரில் இடம் பெற இருப்பதாக கூறப்படுகிறது.



இந்திய அணியின் முன்னாள் கேப்டனும் ஐ.பி.எல். சென்னை அணியின் முன்னணி வீரருமான எம்.எஸ்.தோனி, தாய்லாந்தில் தனது குடும்பத்துடன் புத்தாண்டை கொண்டாடினார்.

## பிடே மீது ரஷ்ய வீரர் வழக்கு

ஸ்விட்சர்லாந்தின் லுசானேவில் உள்ள நீதிமன்றத்தில் விளாதிமிர் கிராம்னிக் ஃபிடே சிஇஓ எமில் சுடோவ்ஸ்கி மீது அவதூறு வழக்குப் பதிவு செய்துள்ளார். ஆன்லைன் செஸ் விளையாட்டில் நடைபெறும் மோசடிகளை அம்பலப்படுத்தியதிற்காக விளாதிமிர் கிராம்னிக் மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. விளாதிமிர் கிராம்னிக் பலர் மீது இந்த விமர்சனங்களை முன்வைத்தார். அதில் ஒருவரான 29 வயது அமெரிக்க செஸ் கிராண்ட் மாஸ்டர் டேனியல் நரோடிட்ஸ்கி சமீபத்தில் இறந்தார்.

அவர் தற்கொலை செய்துகொண்டாரா அல்லது போதைப் பொருள் உட்கொண்டதால் இறந்தாரா என்பது தெளிவாக தெரியாத நிலையில், பலரும் விளாதிமிர் கிராம்னிக்கை கடுமையாக விமர்சித்தார்கள். இதேபோல் விளாதிமிர் கிராம்னிக் விமர்னத்தினால் சீலேவின் கிராண்ட்மாஸ்டர் டேவிட் நவாராவும் தனக்கு தற்கொலை எண்ணங்கள் வந்ததாகக் கூறியிருந்தார். இதனால் பல செஸ் வீரர்கள் விளாதிமிர் கிராம்னிக் விமர்சித்தார்கள். ஃபிடேவும் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை குழுவிடம் புகார் அளிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. இந்நிலையில், விளாதிமிர் கிராம்னிக் ஸ்விட்சர்லாந்தில் அவதூறு வழக்கினை பதிவு செய்துள்ளார்.

## இந்திய அணிக்கு ஐ.சி.சி. கெடு

20 அணிகள் இடையிலான 10-வது ஐ.சி.சி. டி20 உலக கோப்பை கிரிக்கெட் தொடர் பிப்ரவரி 7-ந்தேதி முதல் மார்ச் 8-ந்தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்கும் 20 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் நடப்பு சாம்பியனான இந்திய அணி ‘ஏ’ பிரிவில் பாகிஸ்தான், நமீபியா, நெதர்லாந்து மற்றும் அமெரிக்காவுடன் இடம் பெற்றுள்ளது.

இந்த தொடருக்கான அணியை ஒவ்வொரு நாடும் அறிவித்து வருகின்றனர். இதில் இந்தியா, இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் அறிவித்து விட்டனர். மற்ற நாடுகள் இன்னும் அறிவிக்கபடாமல் உள்ளது. இந்நிலையில் உலகக் கோப்பைக்கான அனைத்து அணிகளும் ஜனவரி 31-ம் தேதி வரை தங்கள் அணியில் மாற்றங்களைச் செய்யலாம் என ஐசிசி அறிவித்துள்ளது.

## விற்று தீர்ந்த டிக்கெட்டுகள்

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் மற்றும் 5 டி20 ஓவர் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க இருக்கிறது. இதில் முதலில் ஒருநாள் தொடரும் அதனை தொடர்ந்து டி20 தொடரும் நடைபெற உள்ளது. இதற்கான முதல் ஒருநாள் போட்டி வரும் ஜனவரி 11-ம் தேதி தொடங்க உள்ளது. ஜனவரி 14 மற்றும் 18 ஆம் தேதிகளில் முறையே 2-வது மற்றும் மூன்றாவது ஒருநாள் போட்டி நடைபெறுகிறது.

இந்த 3 ஒருநாள் போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை தொடங்கும் தேதி 2 நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது. அதன்படி முதல் ஒருநாள் போட்டிக்கான ஆன்லைன் டிக்கெட் விற்பனை தொடங்கிய 8 நிமிடத்தில் அனைத்து டிக்கெட்டுகளும் விற்று தீர்ந்துள்ளது. இந்திய நட்சத்திர வீரர்களான ரோகித் மற்றும் விராட் கோலியை காண ரசிகர்கள் ஆவலுடன் உள்ளது இதன்மூலம் தெரியவருகிறது.

## சர்பராஸ் கான் நெகிழ்ச்சி

விஜய் ஹசாரே கோப்பை உள்ளூர் ஒருநாள் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது. இந்த தொடரில் மும்பை அணிக்காக சகோதரர்கள் சர்பராஸ் கான் - முஷீர் கான் விளையாடி வருகிறார்கள். அந்தத் தொடரில் ஜெய்ப்பூரில் டிசம்பர் 31ஆம் தேதி நடைபெற்ற போட்டியில் கோவாவை 87 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை தோற்கடித்தது. இதில் மும்பை அணிக்காக ஜெய்ஸ்வால் 46, முஷீர் கான் 60, சர்பராஸ் கான் சதமடித்து 157, ஹர்டிக் டாமோர் 53 ரன்கள் அடித்து மும்பை 444 ரன்கள் குவிக்க முக்கிய பங்காற்றினார்கள். குறிப்பாக 3-வது விக்கெட்டுக்கு தம்பியுடன் சேர்ந்து கோவாவை வெளுத்து வாங்கிய சர்ப்ராஸ் 93 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து அசத்தினார்.

இந்நிலையில் ஒரு உள்ளூர் போட்டியில் தாமும் முசீர் கானும் சேர்ந்து ஒன்றாக சதமடிக்க வேண்டும் என்பது கனவு என்று சர்பராஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- ரு போட்டியில் நாங்கள் இருவரும் சதங்கள் அடித்து ஒன்றாக பேட்டை உயர்த்த வேண்டும் என்பது கனவாகும். அதை நாங்கள் உண்மையாக செய்ய விரும்புகிறோம். நாங்கள் ரஞ்சிக் கோப்பையில் சதமடிக்க நினைத்தது நடக்கவில்லை. இன்றும் முஷீர் சதமடிக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். களத்தில் விளையாடும் போது எப்படி பவுலரை கையாளலாம் அல்லது ஆட்டத்தின் வேகத்தை கட்டுப்படுத்தலாம் என்பதைப் பற்றி நாங்கள் ஒருவரை ஒருவர் ஆலோசித்துக் கொள்வோம். என்று சர்பராஸ் கூறினார்.

## தமிழக அணி 3-வது தோல்வி

33-வது விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் எலைட் பிரிவில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. இதில் நடந்த 4-வது சுற்று ஆட்டங்களில் ஆமதாபாத்தில் நடந்த ஒரு ஆட்டத்தில் (ஏ பிரிவு) முன்னாள் சாம்பியனான தமிழக அணி, ஜார்கண்டை எதிர்கொண்டது. இதில் ‘டாஸ்’ வென்ற ஜார்கண்ட் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் பேட் செய்த தமிழக அணி 45 ஓவர்களில் 243 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. பிரதோஷ் ரஞ்சன் பால் 49 ரன்களும், பாபா இந்திரஜித் 48 ரன்களும் எடுத்தனர். கேப்டன் என்.ஜெகதீசன் டக்-அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார்.

தொடர்ந்து ஆடிய ஜார்கண்ட் 41 ஓவர்களில் ஒரு விக்கெட்டுக்கு 244 ரன்கள் எடுத்து 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் 3-வது வெற்றியை பெற்றது. ஷிகர் மோகன் 90 ரன்களில் கேட்ச் ஆனார். உத்கர்ஷ் சிங் 123 ரன்களுடனும் (120 பந்து, 13 பவுண்டரி, 3 சிக்சர்), விராட் சிங் 20 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். 4-வது லீக்கில் ஆடிய தமிழக அணி தொடர்ச்சியாக சந்தித்த 3-வது தோல்வியாகும். இதன் மூலம் தமிழக அணியின் கால்இறுதி வாய்ப்பு ஏறக்குறைய முடிந்து விட்டது.

# மும்பை அணி வெற்றி

**ஜெய்ப்பூர், ஜன. 02-**

விஜய் ஹசாரே கோப்பை தொடரில் கோவா அணியை 87 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

**ஜெய்ப்பூரில்...**

33-வது விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் எலைட் பிரிவில் பங்கேற்றுள்ள 32 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. இதில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை - கோவா அணிகள் மோதின. அதன்படி, முதலில் பேட் செய்த மும்பை அணியில் சர்பராஸ் கான் அதிரடியாக விளையாடி ரன்கள் குவித்தார். பந்துகளை பவுண்டரி , சிக்சருக்கு பறக்க விட்ட அவர் சதமடித்து அசத்தினார்.அவர் 75 பந்துகளில் 14 சிக்சர், 9 பவுண்டரி உள்பட 157 ரன்களை குவித்தார்.

**357 ரன்கள் மட்டும்...**

இறுதியில், மும்பை அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 444 ரன்களைக் குவித்தது. 445 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய கோவா அணி 50 ஓவரில் 9 விக்கெட்க்கு 357 ரன்கள் மட்டுமே எடுத்தது.

## புத்தாண்டு தினத்தை முன்னிட்டு

# கருணாநிதி நினைவிடத்தில் முதல்வர் ஸ்டாலின் மரியாதை




**சென்னை, ஜன. 02-**

2026 பிறந்த நிலையில் நாடு முழுவதும் நேற்று ஆங்கில புத்தாண்டு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்நிலையில், புத்தாண்டு நாளை ஒட்டி மெரினா கடற்கரையில் உள்ள பேரறிஞர் அண்ணா, கலைஞர் நினைவிடங்களில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மரியாதை செலுத்தினார்.

முன்னதாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தார். அப்போது அவர், புது வெற்றியை தேடித்தர உள்ள உடன்பிறப்புகளுடன் தொடங்கியது புத்தாண்டு என புத்தாண்டை ஒட்டி தன்னை சந்திக்க வருகை தரும் தொண்டர்களின் வீடியோக்களை வெளியிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் பகிர்ந்தார்.



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக்குழுவின் உறுப்பினர் மற்றும் டிசம்பர்-3 இயக்கத்தின் தலைவர் தீபக்நாதன் புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



2026 ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமியை அ.தி.மு.க. நிர்வாகிகள் நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர் . இதன் ஒரு பகுதியாக அ.தி.மு.க. அமைப்பு செயலாளரும், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளருமான டாக்டர் சி.விஜயபாஸ்கர் நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

# துணை ஜனாதிபதி இன்று சென்னை வருகை

**சென்னை, ஜன. 02-**

துணை ஜனாதிபதியாக சி.பி.ராதா கிருஷ்ணன் பதவி ஏற்ற பிறகு அவருக்கு சென்னையில் பாராட்டு விழா நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்தன. 2 முறை அந்த நிகழ்ச்சி தள்ளிப்போனது. இந்தநிலையில் முதல் முறையாக இன்று அவர் சென்னை வருகிறார்.

அவருக்கு பிரமாண்ட வரவேற்பு அளிக்க தமிழக பா.ஜ.க. கட்சியினரும் சென்னை குடியிருப்போர் நலச்சங்கத்தினரும் ஏற்பாடுகள் செய்து உள்ளனர். மாலை 5 மணி அளவில் எம்.ஜி.ஆர். அறக்கட்டளை சார்பில் கலைவாணர் அரங்கில் பாராட்டு விழா நடக்கிறது. விழாவுக்கு முன்னாள் அமைச்சர் ஹண்டே தலைமை தாங்குகிறார். எம்.ஜி.ஆர். பல்கலைக்கழக வேந்தர் ஏ.சி.சண்முகம் முன்னிலை வகிக்கிறார்.

மத்திய அமைச்சர் எல்.முருகன், இசைஞானி இளையராஜா ஆகியோர் பாராட்டு உரை வழங்குகிறார்கள் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதிகள் டி.என்.வள்ளிநாயகம், ஜோதிமணி, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக வேந்தர் பாரிவேந்தர், வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர், ஐசரி கணேஷ், இயக்குனர் பாக்கியராஜ், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், டாக்டர் சுதா சேஷையன், டாக்டர் சொக்கலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

முடிவில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் ஏற்புரை நிகழ்த்துகிறார். முன்னதாக இன்று காலை எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தில் நடக்கும் பட்டமளிக்கும் விழாவில் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்குகிறார்.

## கடந்த ஆண்டில் மட்டும்

# திருப்பதி கோவிலில் 13.52 கோடி லட்டுகள் விற்பனை

**திருப்பதி, ஜன. 02-**

2025-ஆம் ஆண்டில் திருப்பதி ஏழுமலையான் கோயில் லட்டு விற்பனை குறித்த அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் வெளியாகியுள்ளன.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 2025-ஆம் ஆண்டில் மொத்தம் 13.52 கோடி லட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இது முந்தைய ஆண்டுகளை விட மிகப்பெரிய வளர்ச்சியாகக் கருதப்படுகிறது. 2024ம் ஆண்டில் மொத்த லட்டு விற்பனை 12.15 கோடியாகவும், 2025-ல் 13.52 கோடியாகவும் உள்ளது. இது, 1.37 கோடி அதாவது 10 சதவீதம் அதிகளவு விற்பனையாகும்.

# திருஉத்தரகோசமங்கை ஆருத்ரா தரிசன ஏற்பாடு: கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் நேரில் ஆய்வு




**ராமநாதபுரம், ஜன. 02-**

திருஉத்தரகோசமங்கை திருக்கோவிலில் நடைபெற உள்ள ஆருத்ரா தரிசன விழாவையொட்டி ஏற்பாடுகளை கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், திருஉத்தரகோசமங்கை மங்களநாதசுவாமி திருக்கோயிலில் நடைபெறவுள்ள ஆருத்ரா தரிசன திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து எஸ்.பி.சந்தீஷ் முன்னிலையில் கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட கலெக்டர் திருஉத்தரகோசமங்கை மங்களநாத சுவாமி திருக்கோயில் வளாகத்தில் பொதுமக்கள் வாகனங்கள் நிறுத்துமிடம், பேருந்துகள் நிறுத்துமிடம் குறித்து பார்வையிட்டதுடன், தரிசன டிக்கெட் வழங்குமிடம், குடிநீர் விநியோகிக்கும் இடம், தற்காலிக பொது கழிவறை அமையும் கூடாரங்கள், சாலை வசதி, மின்விளக்கு வசதி ஆகியவற்றை பார்வையிட்டதுடன், பொதுமக்களின் தேவைக்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்திட வேண்டும் என அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

தேவஸ்தானம் மூலம் அதேபோல் கோயில் வளாகத்தில் உரிய உட்கட்டமைப்பு வசதிகளை செய்திட வேண்டுமென தெரிவித்தார். மேலும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய செல்லும் வழிகளில் தடுப்புப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு கோவிலுக்கு வரும் பொதுமக்கள் சிரமமின்றி சுவாமி தரிசனம் செய்து சென்றிடும்; வகையில் அமைத்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது ராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஹபிபூர் ரஹ்மான், தேவஸ்தான திவான் பழனிவேல் பாண்டியன், வட்டாட்சியர் செல்லப்பா, வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.



**அருப்புக்கோட்டை அமுதலிங்கேஸ்வரர் கோவில், முத்து மாரியம்மன் கோவில், ஆயிரங்கண் மாரியம்மன் கோவில், மீனாட்சி சொக்கநாதர் கோயில், பழனி ஆண்டவர் கோவில் உட்பட அருப்புக்கோட்டையில் உள்ள பல கோயில்களில் ஆங்கில புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு அதிகாலை 4 மணிக்கு கோயில்களில் திறந்து சிறப்பு அபிஷேகம், அலங்கார, பூஜைகள் நடைபெற்றன. புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்கள் அதிகாலையில் புத்தாடைகள் அணிந்து குடும்பத்தோடு கோவில்களில் நீண்ட வரிசையில் இன்று சாமி தரிசனம் செய்தனர்.**

## புத்தாண்டு: மாவட்ட கழக செயலாளர்
# ராஜன் செல்லப்பாவை நேரில் சந்தித்து மேலூர் நிர்வாகிகள் வாழ்த்து பெற்றனர்



**மேலூர், ஜன. 02-**

2026ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டு தினத்தையொட்டி மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேலூர் நகர் அ.தி.மு.க. சார்பில் மேலூர் நகர் கழகச் செயலாளர் எஸ்.எம்.சரவணகுமார் தலைமையில், மேலூர் நகர் அம்மா பேரவை செயலாளரும், முன்னாள் நகர் மன்ற தலைவர் எம்.ஓ. சாகுல் ஹமீது முன்னிலையில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளரும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினருமான வி.வி. ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏவை நேரில் சந்தித்து கட்சி நிர்வாகிகளும், தொண்டர்களும் வாழ்த்து பெற்றனர்.

உடன் மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் சீனிவாசன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர்கள் நாக சுப்பிரமணியன், மாணிக்கம், ஆனைசேவுகன், அய்யங்காளை, சாலமன்சம்பத், மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞரணி துணை செயலாளர் குமரன், மாவட்ட மாணவரணி தலைவர் மின்னல் மணி, மாவட்ட விவசாய பிரிவு துணைச்செயலாளர் முத்து, மாவட்ட சிறுபான்மை பிரிவு துணைச்செயலாளர் பகதூர் ராஜா, மாவட்ட அண்ணா தொழிற் சங்க துணை செயலாளர் ராமதாஸ், நகர் அவை தலைவர் பூச்செண்டு, நகர் துணைச் செயலாளர் பாண்டி லெட்சுமி, நகர் மாவட்ட பிரதிநிதிகள் திருப்பதி, அறிவழகன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சூரக்குண்டு துரை அண்ணா, நகர் அம்மாபேரவை துணை செயலாளர் மணிகண்டன், நகர் இளைஞர் பாசறை தலைவர் நளன், நகர் ஐடிவிங் செயலாளர் பிரபாகரன், ஐடிவிங் துணைச்செயலாளர் யுவராஜன், வட்டக் கழகச் செயலாளர்கள் சக்கரவர்த்தி, பாலமுருகன், செந்தில், பாலகிருஷ்ணன், சேகர், சுரேஷ் உட்பட ஏராளமான கட்சி தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



**கடலாடி தாலுகா ஆப்பனூர் அருகே அமைந்துள்ள அரியநாச்சிஅம்மன் கோவிலில் பிரதோஷம் மற்றும் புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.**

# நத்தம் மாரியம்மன் கோவிலில் ஆங்கில புத்தாண்டையொட்டி பக்தர்கள் தரிசனம்



**நத்தம், ஜன. 02-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மாரியம்மன் கோவிலில் ஆங்கிலபுத்தாண்டையொட்டி அதிகாலையிலிருந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

முன்னதாக அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.தொடர்ந்து சர்வ அலங்காரத்தில் மாரியம்மன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதைப்போலவே கோவில்பட்டி கைலாசநாதர், பகவதி அம்மன், காளியம்மன், ராக்காயி அம்மன், குட்டூர் அண்ணாமலையார் கோவில், தில்லை காளியம்மன் கோவில்களிலும் ஆங்கில புத்தாண்டு வருடப் பிறப்பையொட்டி ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு விளக்கேற்றி தரிசனம் செய்தனர்.இதைப்போலவே திருமலைக்கேணி சுப்பிரமணிய சுவாமி கோயிலிலும், அருகிலுள்ள காமாட்சி மவுனகுருசாமி மடத்திலும் பக்தர்கள் விளக்கேற்றி வழிபாடு செய்தனர்.

## திருமங்கலத்தில் தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி சார்பில்
# 200 கார் ஓட்டுனர்களுக்கு உதவிகளை சேடபட்டி மு.மணிமாறன் வழங்கினார்



**திருமங்கலம். ஜன. 02-**

திருமங்கலம் நகரில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு வாடகை கார் ஓட்டுனர்கள் 200 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தி.மு.க.வினர் நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகின்றனர்.இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் நகரில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்,நகர் மன்றத் துணைத் தலைவர் ஆதவன் அதியமான் ஏற்பாட்டின் பேரில் திருமங்கலத்திலுள்ள டாக்ஸி ஸ்டாண்ட் வாடகை கார் ஓட்டுநர்கள் 200க்கும் மேற்பட்டோருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கிடும் விழா சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவிற்கு திருமங்கலம் நகரச் செயலாளர் ஸ்ரீதர் தலைமை வகித்தார். முன்னாள் எம்.எல்.ஏ லதா அதியமான் முன்னிலை வகித்தார். திருமங்கலம் நீதிமன்ற வளாகம் அருகே நடைபெற்ற இவ் விழாவில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு கார் ஓட்டுனர்கள் 200க்கும் மேற்பட்டோருக்கு , புத்தாடைகள், அடுக்கு டிபன் பாக்ஸ், காலண்டர்,பிளாஸ்க் உள்ளிட்ட தொகுப்பினை நலத்திட உதவிகளாக வழங்கி வாழ்த்து தெரிவித்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சிகளில் தி.மு.க. ஒன்றியச் செயலாளர்கள் மதன்குமார், ஆலம்பட்டி சண்முகம், தனபாண்டியன்,நகர அவைத் தலைவர் ஆசாத் என்ற சேட், நகர பொருளாளர்,கவுன்சிலர் சின்னச்சாமி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் கவிஸ்ரீ தினேஷ்,முன்னாள் நகர் மன்ற தலைவர் நிரஞ்சன், நகர துணைச் செயலாளர்கள செல்வம்,சுதாகர் கவுன்சிலர்கள் திருக்குமார், ஜஸ்டின் திரவியம், முத்து காமாட்சி விஜயன், ரம்ஜான் பேகம் ஜாகிர் உசேன், சரண்யா ரவி மற்றும் நிர்வாகிகள் சிவமுருகன், ஆதிமூலம், சித்த நாதன், தங்கப்பாண்டியன், முருகன், வெள்ளையத்தா, காண்டை முருகன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே பூக்குழி இறங்கி ஐயப்ப பக்தர்கள் நேர்த்திக்கடன்



**நத்தம், ஜன. 02-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே மணக்காட்டூர் ஸ்ரீ தர்ம சாஸ்தா ஐயப்பன் கோவில் 14-ஆம் ஆண்டு சபரிமலை பாதயாத்திரை குழு சார்பில் ஐயப்பன் கோவிலில் மண்டல பூஜை நடந்தது.தொடர்ந்து ஐயப்பனுக்கு அபிஷேகம்,தீபாராதனையும், தொடர்ந்து சுவாமிக்கு பால், பழம்,பன்னீர் உள்பட 16 வகையான அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

பின்னர் அய்யனார் தீர்த்தம் அழைத்து வரப்பட்டு கிராம தேவதைகளுக்கு கனி மாற்றுதல் மற்றும் தோரணம் கட்டும் நிகழ்ச்சி நடந்தது.தொடர்ந்து நேற்று முன்தினம் இருமுடி கட்டி அன்று இரவு அன்னதானம் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஐயப்பன் ரத வீதியுலா கோவில் முன்பிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் கோவிலை சென்றடைந்தது. பின்னர் முக்கிய நிகழ்வான ஐயப்ப பக்தர்கள் பூக்குழி இறங்கும் நிகழ்ச்சி நேற்று காலை நடந்தது. இதில் குருசாமி முதலில் பூக்குழி இறங்க 100க்கும் மேற்பட்ட ஐயப்ப பக்தர்கள் ஒன்றன் பின் ஒன்றாக பூக்குழி இறங்கி தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர்.இதில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை மணக்காட்டூர் கோவில் நிர்வாகிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள், ஊர்பொது மக்கள் செய்திருந்தனர்.



**ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.வை மாநில அ.தி.மு.க. மாணவரணி இணை செயலாளர் பா.குமார், மாநகர் மாவட்ட மாணவரணி செயலாளர் ஏ.பார்த்திபன் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தனர். இதில் மாணவரணி மாவட்ட அவைத்தலைவர் மார்க்கெட் எம்.மார்நாடு உள்ளிட்ட மாணவரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**



**ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.வை மாநகர் மாவட்ட அண்ணா தொழிற் சங்க பேரவை மாவட்ட செயலாளர் ஆர்.சக்திவிநாயகர்பாண்டின் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இதில் அண்ணா தொழிற்சங்க பேரவை நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.**



**ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.வை அமைப்பு சாரா ஓட்டுரணி மாவட்ட செயலாளர் திருமுருகன் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். இதில் ஓட்டுரணி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.**



**ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.வை மாநகர் மாவட்ட வடக்கு 5- ம் பகுதி செயலாளர் வக்கீல் அசோகன் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இதில் மாநகர் மாவட்ட வடக்கு 5- ம் பகுதி அ.தி.மு.க.நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

# புத்தாண்டை முன்னிட்டு அன்பு மாடல் நகர் சீரடி சாய்பாபா ஆலயத்தில் சிறப்பு ஆரத்தி நிகழ்வு




**அருப்புக்கோட்டை, ஜன. 02-**

அருப்புக்கோட்டை அருகே செட்டிபட்டி அன்பு மாடல் நகரில் ஸ்ரீ சீரடி சாய்பாபா ஆலயத்தில் 2026 புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ஸ்ரீ சீரடி சாய்பாபாவிற்கு சிறப்பு ஆரத்தி நடைபெற்றது.

புத்தாண்டை முன்னிட்டு கோவில் வளாகத்தில் பள்ளி மாணவ மாணவியர்களின் பரத நாட்டியம் மற்றும் கண்ணை கவரும் சிவதாண்டவம் உள்ளிட்ட பல்வேறு நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மேலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், நலத்திட்ட உதவிகளை அறக்கட்டளை நிறுவனர் மனிதத் தேனீ சுந்தரமூர்த்தி மனைவி சுப்புலட்சுமி வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து ஸ்ரீ சீரடி சாய்பாபாவிற்கு பக்தர்கள் பக்தி கீர்த்தனைகள் பாட சிறப்பு ஆரத்தி நடைபெற்றது.

இந்தப் சிறப்பு ஆரத்தி விழாவில் அருப்புக்கோட்டை பந்தல்குடி, வாழ்வாங்கி, செட்டிகுறிச்சி, சிதம்பராபுரம் உள்ளிட்ட சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை பந்தல்குடி ஸ்ரீ சாய்பாபா டிரஸ்ட் நிர்வாகிகள் மனித தேனீ சுந்தரமூர்த்தி சுப்புலட்சுமி தம்பதியினர் செய்தனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் மற்றும் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.பீட்டர் அல்போன்ஸ் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, மற்றும் ரூபி மனோகரன், அமிர்தராஜ், காங்கிரஸ் கட்சியின் அமைப்புச் செயலாளர் ராம் மோகன் ஆகியோர் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திருச்சி செல்கிறார்

## வைகோவின் நடைபயணத்தை துவக்கி வைக்கிறார்

**திருச்சி, ஜன. 02-**

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவின் நடைபயணத்தை துவக்கி வைக்க முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திருச்சி செல்கிறார்.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ திருச்சியில் இருந்து மதுரை வரை ஜனவரி 2-ம் தேதி முதல் 12-ம் தேதி வரை சமத்துவ நடைபயணம் செல்கிறார். இந்த நடைபயணத்தை தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 9 மணி அளவில் திருச்சி தென்னூர் அண்ணாநகர் உழவர் சந்தை அருகில் தொடங்கி வைத்து பேசுகிறார்.

இதில் பங்கேற்பதற்காக முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று (வெள்ளிக்கிழமை) காலை விமானம் மூலம் திருச்சிக்கு வருகிறார். விமான நிலையத்தில் இருந்து காரில் புறப்படும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சி தலைமை தபால் நிலையத்தில் இருந்து தென்னூர் அண்ணாநகர் உழவர் சந்தை திடல் வரை சென்று பொதுமக்களை சந்திக்கிறார்.

சமத்துவ நடைபயணத்தை தொடங்கி வைத்த பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் விமானம் மூலம் சென்னைக்கு புறப்பட்டு செல்கிறார். முதல்வர் மு.க.ஸ்டாலினின் வருகையை முன்னிட்டு அது தொடர்பாக சென்னையில் இருந்து பாதுகாப்பு துறை அதிகாரிகள் நேற்று திருச்சிக்கு வந்து ஆலோசனை நடத்தினர்.

# நாட்டில் 2027-ல் புல்லட் ரயில் சேவை தொடங்கும்

## மத்திய அமைச்சர் அஸ்வினி தகவல்

**புதுடெல்லி, ஜன. 02-**

நாட்டில், முதல் புல்லட் ரயில் சேவையானது வரும் 2027-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதி செயல்பாட்டுக்கு வரும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

முதல் பகுதியாக, சூரத் முதல் பிலிமோரா வரை இயக்கப்படும். அதன் பிறகு, வாபி முதல் சூரத் வரை விரிவாக்கம் செய்யப்படும். தொடர்ந்து வாபி முதல் அகமதாபாத் வரையிலும், படிப்படியாக தானே முதல் அகமதாபாத் வரையிலும், மும்பை முதல் அகமதாபாத் வரையிலும் என புல்லட் ரயில் சேவை தொடர்ந்து விரிவுபடுத்தப்படும் என்றார். புல்லட் ரயிலுக்கு நீங்கள் இப்போதே கூட டிக்கெட் எடுத்துக் கொள்ளலாம். இது வரும் 2027ஆம் ஆண்டு முதல் இயக்கப்படும் என்று சிரித்தபடியே கூறினார்.

508 கிலோ மீட்டர் தொலைவுக்கு மும்பை முதல் அகமதாபாத் வரை அமைக்கப்பட்டு வரும் அதிவிரைவு ரயில் சேவையான புல்லட் ரயிலுக்கான கட்டமைப்புப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.

மேம்பாலங்கள், சுரங்கங்கள், ரயில் நிலையங்கள் அமைக்கும் பணியும் துரிதமாக நடக்கிறது.

இந்த ரயில் சேவை தொடங்கியதும், ரயில்கள் மணிக்கு 320 கிலோ மீட்டர் வேகத்தில் இயக்கப்படும். இதனால் பயண நேரம் 2 மணி நேரங்களாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரே நேரத்தில் பல்வேறு பணிகளும் துரித வேகத்தில் நடப்பதால் 2027ல் பணிகள் நிறைவு பெற்று சேவை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், படுக்கை வசதி கொண்ட வந்தே பாரத் ரயில் இந்த மாதம் தொடங்கப்படும் என்றும், ஜனவரி மத்தியில், இந்த ரயில் சேவையை பிரதமர் நரேந்திர மோடி கொடியசைத்துத் தொடங்கி வைப்பார் என்றும் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.



தலைமைச்செயலகத்தில் நேற்று முன்தினம் வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் 201-வது வாரியக் கூட்டமும், தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின் 38-வது வாரியக் கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை சார்ந்த தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் வாரிய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



2026 ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமியை அ.தி.மு.க. நிர்வாகிகள் நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். இதன் ஒரு பகுதியாக அ.தி.மு.க. கொள்கை பரப்பு துணை செயலாளரும், நடிகையுமான கவுதமி நேரில் சந்தித்து புத்தகம் வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

### புகையிலை பொருள்கள் மீது கூடுதல் கலால் வரி:

# வரலாறு காணாத வகையில் அதிகரிக்கும் சிகரெட் விலை

## வரும் பிப்ரவரி 1-ம் தேதி முதல் புதிய வரி அமல்

**புதுடெல்லி, ஜன. 02-**

புகையிலை பொருட்களுக்கு கூடுதல் வரி விதிப்பு வரும் பிப்ரவரி 1-ம் தேதி முதல் அமலுக்கு வருவதாக மத்திய அரசு அரசாணையை வெளியிட்டுள்ளது.

சிகரெட் உள்ளிட்ட புகையிலை பொருட்கள் மீதான கூடுதல் கலால் வரி சட்டத்திருத்தம் பிப்ரவரி 1-ம் தேதி முதல் அமலுக்கு வரும் என மத்திய அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. நடந்து முடிந்த பாராளுமன்ற குளிர் கால கூட்டத்தொடரில், கலால் திருத்த மசோதா - 2025 நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோதாவின்படி, சிகரெட், சுருட்டு, ஹூக்கா உள்ளிட்ட புகையிலை பொருட்கள் மீது கூடுதல் செஸ் வரி விதிக்கப்படுகிறது. அதாவது, தற்போதையசட்டத்தின்படி, சிகரெட்டுகளின் நீளம் மற்றும் வகையை பொறுத்து, 1,000 சிகரெட்டுகளுக்கு, 200 முதல் 735 ரூபாய் வரை கலால் வரி விதிக்கப்படுகிறது.

இந்நிலையில் நேற்று புகையிலை பொருட்களுக்கு கூடுதல் வரி விதிப்பு பிப்ரவரி 1-ம் தேதி முதல் அமலுக்கு வருவதாக மத்திய அரசு அரசாணையை வெளியிட்டுள்ளது.

இதனால் பிப்ரவரி 1 தேதி முதல் சிகரெட் விலை கணிசமாக உயரும். 1,000 சிகரெட்களுக்கு ரூ.2,050 முதல் ரூ.8,500 வரை கூடுதல் கலால் வரி விதிக்கப்பட்டு உள்ளது.

அதேபோல, மெல்லும் புகையிலை மீதான வரி, 25 சதவீதத்தில் இருந்து, 100; ஹூக்கா புகையிலை வரி, 25 சதவீதத்தில் இருந்து, 40; பைப் சிகரெட்டுகளுக்கான புகை கலவைகள் மீதான வரி, 60 சதவீதத்தில் இருந்து 325 சதவீதமாக அதிகரிக்க உள்ளது. இந்த கூடுதல் செஸ் உயர்வால் புகையிலை பொருட்கள் விலை பலமடங்கு உயர உள்ளது.

# ஜன. 4-ல் அமித்ஷா புதுக்கோட்டை வருகை

**புதுக்கோட்டை, ஜன. 02-**

புதுக்கோட்டையில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் 'தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்' என்ற பிரசாரப் பயணத்தின் நிறைவு விழா ஜனவரி 4-ஆம் தேதி உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த விழாவில் பங்கேற்பதற்காக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா புதுக்கோட்டை வருகை தரவுள்ளதாக அக்கட்சியினர் தெரிவித்தனர்.

பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கடந்த அக். 12-இல் மதுரையில் தொடங்கிய தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம் என்ற பிரசாரப் பயணத்தின் நிறைவு விழா புதுக்கோட்டையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக நகருக்கு அருகேயுள்ள பாலன்நகர் பள்ளத்திவயல் பகுதியில் சுமார் 42 ஏக்கர் பரப்பளவில் தனியார் நிலத்தில் பிரம்மாண்ட பந்தல் அமைக்கும் பணிகள் அண்மையில் தொடங்கின. பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோரின் தேதியையொட்டி விழா நடைபெறும் தேதி உறுதி செய்யப்படும் என ஏற்கெனவே அறிவித்திருந்தனர்.

தற்போது, ஜனவரி 4-ஆம் தேதி உள்துறை அமைச்சர் அமித்ஷா வருவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், மாநில பா.ஜ.க. அமைப்புச் செயலர் கேசவவிநாயகம் புதன்கிழமை புதுக்கோட்டை வந்தார். விழா நடைபெறும் இடத்தை அவர் நேரில் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார். அப்போது, மாவட்ட பா.ஜ.க. தலைவர் என். ராமச்சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்து விளக்கினர்.

# தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு

**சென்னை, ஜன. 02-**

ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (02-01-2026) தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை (03-01-2026) தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். வடதமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். 04-01-2026 முதல் 06-01-2026 வரை : தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. குடும்பத்துடன் சாமி தரிசனம் செய்தார். இதில் ஜெயந்தி ராஜூ, சௌமியா விஜயகுமார், கணேஷ்பிரபு, ரம்யா கணேஷ்பிரபு, விஷ்ணுசாகர், விபின் சாகர், வருண்சாகர் மற்றும் பா.குமார், சக்திவிநாயகர்பாண்டியன், எம்.ஜி.ராமச்சந்திரன், எஸ்.டி.ஜெயபாலன், கார்னர் பாஸ்கர், ஏ.பாஸ்கரன், ரேசன் பாலமுருகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.